# செயலாற்றுகை அறிக்கை 2025

## சமூக சேவைகள் திணைக்களம்

## செலவுத் தலைப்பு இலக்கம் :- 216


சமூக சேவைகள் திணைக்களம்

இரண்டாம் மாடி

செத்சிறிபாய - II ஆம் கட்டம்

பத்தரமுல்லை

தொலைபேசி - 0112187040

பெக்ஸ் - 0112186276

மின்னஞ்சல் - director@socialservices.gov.lk

இணையத்தளம் - www.socialservices.gov.lk

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **01 ஆம் அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு** | | |
| 1.1 | அறிமுகம் | 3-5 |
| 1.2 | நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் | 6 |
| 1.3 | பிரதான பணிகள் | 7-8 |
| 1.4 | நிறுவன ஒழுங்கமைப்பு | 9 |
| 1.5 | சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் | 10-20 |
| 1.6 | சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள நிதிகள் | 20-21 |
| 1.7 | வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி பெறும் கருத்திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் தகவல்கள் | 21-22 |
| **02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்** | | |
| 2.1 | வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 23-39 |
| 2.2 | போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தும் கருத்திட்டம் | 40 |
| 2.3 | வலது குறைந்த சமுதாயத்தினருக்கான தொழில்வாய்ப்பு உதவி மேம்பாட்டுக்கான கருத்திட்டம் | 41 |
| 2.4 | ஆராய்ச்சி அலகைத் தாபித்தல் | 42 |
| 2.5 | மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிக்கும் கருத்திட்டம் | 42 |
| 2.6 | வெற்றிகள் | 43 |
| 2.7 | சவால்கள் | 43 |
| 2.8 | இலக்குகள் | 44 |
| **03 ஆம் அத்தியாயம் - ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை** | | |
| 3.1 | நிதிச் செயலாற்றுகைக் கூற்று | 45-47 |
| 3.2 | நிதி நிலைமை பற்றிய கூற்று | 48 |
| 3.3 | காசோட்டம் பற்றிய கூற்று | 49-50 |
| 3.4 | நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 51 |
| 3.5 | வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை | 51 |
| 3.6 | ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை | 51 |
| 3.7 | நி.பி. 208 இற்கமைய, வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடு | |
| 3.8 | நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை | 51 |
| 3.9 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 52-64 |
| **04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டிகள்** | | |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) | 65 |
| **05 ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் செயாற்றுகை** | | |
| 5.1 | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) | 66 |
| 5.2 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் | 67 |
| **06 ஆம் அத்தியாயம் - மனிதவளங்களின் தோற்றப்பாடு** | | |
| 6.1 | பதவியணி முகாமைத்துவம் | 67-71 |
| 6.2 | நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் முறை | 71-72 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 72-78 |
| **அத்தியாயம் 07 – இயைபு அறிக்கை** | | |
| 7.1 | இயைபு அறிக்கை | 79-84 |

# 01 ஆம் அத்தியாயம்

# நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

பாதுகாப்பான மற்றும் இடையீட்டுச் சமூகமொன்றில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சமுதாயத்தினருக்கு நிவாரணம் செய்துகொடுக்கும் நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற சமூக சேவைகள் திணைக்களம் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் தமது செயற்பணிகளை நிறைவேற்றி வருகின்றது. திணைக்களத்தின் செயற்பணிக்கு இணங்க 2025 ஆம் ஆண்டுக்கு கிடைத்திருந்த ஏற்பாடுகளுக்கு இசைவாக இனங்காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு கீழ் மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, சமூக சேவைகள் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான ஒட்டுமொத்த தகவல்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதன் போது வலதுகுறைந்த இளைஞர், யுவதிகளை தமது வீட்டுக்கு, சமுதாயத்திற்கு பயன்வாய்ந்த பிரஜைகளாக சமூகத்தில் சுயாதீனமாக வாழ்வதற்குத் தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்து அவர்களை தேசிய ஊழியப் படையணியில் முனைப்புடன் செயற்படும் பங்காளர்களாக மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற 11 தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஊடாக அதற்கான வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வலது குறைந்த சமுதாயத்தினருக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (CBR) முறையியல்களுக்கு அமையத் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அம்சமாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலும் 18 வைத்தியசாலைகளில் இருக்கின்ற வலது குறைந்த சமுதாயத்தினருக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

அவ்வாறே, முன் பிள்ளைப் பருவத்திலேயே சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற உடல்சார் மற்றும் உளவியல்சார் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக முன்னதாகவே தலையீடு செய்யத் தேவையான சேவை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாவின்ன மற்றும் சிதிஜய சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் ஊடாக வலது குறைந்த சிறுவர்களின் நலன்புரிக்கான விசேட செயற்பணியொன்று நடைபெற்று வருகின்றது. அத்துடன், 14-30 வயதுக்கு இடைப்பட்ட வயதைச் சேர்ந்த அறிவியல்சார் பலவீனங்களைக் கொண்டுள்ள சிறுவர்களின் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில் பயிற்சிக்கு முன் ஆயத்தப்படுத்துவதற்கு முன் தொழில்சார் திறன் அபிவிருத்தி நிலையமொன்று சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் கொட்டாவ பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின் இறுதியில் திறமைகள் பற்றிய

மதிப்பீடு மற்றும் முன்னேற்ற மீளாய்வை அடுத்து தொழில் பயிற்சி நிறுவனமொன்றுக்கு ஆற்றுப்படுத்தல் அல்லது வீடு அல்லது சமூகத்துடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்வது இந்த நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது.

மேலும், போதைக்கு அடிமையாகியுள்ள ஆட்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டமானது, திணைக்களம் அமுல்படுத்தியுள்ள மற்றொரு நிகழ்ச்சித்திட்டமாக காணப்படுகின்றது. இதன் கீழ் போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு வதிவிட புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களை சமூகமயப்படுத்துவது என்பன மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், பிரதேச மட்டத்தில் மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆளுமை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் நாட்டின் எதிர்கால சந்ததியினரை போதையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கும் பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

வலதுகுறைந்தவர்களின் அழகியற்கலை திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களை தேசிய மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தினால் வலதுகுறைந்தவர்களின் தேசிய கலாசார நிகழ்ச்சித்திட்டமொன்றான ''சித் ரூ'' தேசிய கலை நிகழ்ச்சி, வலது குறைந்தவர்களுக்கான ''சர்வதேச வெண்பிரம்பு தினக் கொண்டாட்டம்'' மற்றும் செவிப்புலனற்றவர்களுக்கான 'சர்வதேச சைகை மொழி தினக் கொண்டாட்டம்' மற்றும் வலதுகுறைந்தவர்களின் விளையாட்டுத் திறமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான தேசிய விளையாட்டு விழாவை நடாத்தல் போன்றன வலதுகுறைந்தவர்களை தேசிய ரீதியாகப் பாராட்டி சமூகத்தை வலுவூட்டுவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

அவ்வாறே, தொழில் பயிற்சிப் பயிலுனர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், பதவியணியினர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு இடையே பரஸ்பரம் நற்புறவு, புரிந்துணர்வு, நம்பிக்கையை வளர்ப்பதற்காக வலதுகுறைந்த சிறுவர்களின் புத்தாண்டு விழாவும் நிறுவன மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. மேலும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற நிறுவனங்களுக்கு இடையே பொசென் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ''பொசென் உதாவய் தஹம் உதாவய்'' எனும் தொணிப்பொருளின் கீழ் பொசென் பக்திப் பாடல் நிகழ்ச்சி, சித்திரம் மற்றும் பொசொன் பந்தல் வடிவமைப்புப் போட்டியை நடாத்தியதன் மூலம் மேற்படி சேவை பெறுநர்களான பிள்ளைகளின் கலை ஆக்கத் திறமைகள், பாடல் திறமையை பாராட்டுவதற்கும் வருடாந்தம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், திணைக்களத்தின் செயற்பணிக்கு இசைவாக சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல வெளிக்கள அலுவலர்களினதும், திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் மற்றும் தலைமை அலுவலகத்தின் அலுவலர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் விளைதிறன் மற்றும் ஆன்மீகத்தை அபிவிருத்தி செய்வதற்கு உள்நாட்டு

மற்றும் வெளிநாட்டு பயிற்சி, செயலமர்வு மற்றும் பாடநெறிகளுக்கு அலுவலர்களை ஈடுபடுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

நாடு முழுவதிலும் பரந்து வாழும் வலதுகுறைந்த சமுதாயத்தினரின் ஆக்கங்களுக்கு தேசிய மட்டத்தில் வர்த்தக சந்தையொன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘திறிய நிபயும் வர்த்தகக் கண்காட்சி’’ஐ நாட்டில் ஏற்பட்ட தித்வா சூறாவளி காரணமாக நடாத்த முடியவில்லையாயினும், நிறுவனங்களில் பயிலுனர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கங்களை ஒன்றுதிரட்டி ‘‘திறிய பொல’’ எனும் சந்தையை செத்சிறிபாய வளவில் வெற்றிகரமாக நடாத்த முடிந்தது.

2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களின் மூலம் உயர்மட்ட செயலாற்றுகையை அடைந்துகொள்ள ஆற்றல் கிடைத்ததுடன், அது தொடர்பான தகவல்கள் மற்றும் செலவுத் தலைப்பு 216 இன் கீழான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை இதில் உள்ளடங்குகின்றது.

## 1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

### நோக்கு

அனைத்து ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய நபர்களினதும் பாதுகாப்பு மற்றும் சமூகத்தில் அவர்களை உள்வாங்கி கண்ணியத்துடன் வாழ வலுவூட்டல்

### செயற்பணி

இலக்கிடப்பட்ட சமுதாயத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதனூடாக சமூக உள்வாங்குதல் தொடர்பில் உள்ளக நிறுவனத்தினை ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்வாண்மையான தலையீட்டினைக் கொண்டு புதுமையான பிரவேசத்தினூடாக துரிதம், வினைத்திறன் மற்றும் வினைத்திறனுடனான ஆய்வுகளை நடாத்தல், கொள்கைகளை திட்டமிடுதல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுற்படுத்துவதனூடாக எதிர்பார்த்த விளைவுகளை அடையப் பெறுதல்

### நோக்கங்கள்

- வலது குறைந்த ஆட்கள் உட்பட ஏனைய ஓரங்கட்டப்பட்ட மற்றும் நன்மைகளை இழந்த நிலைமைக்கு ஆளாகியுள்ள சிறப்புரிமை பெறாத சமுதாயத்தினரின் சமமான உரிமைகள், வாய்ப்புக்கள், சுதந்திரம் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதி செய்தல்.
- வலது குறைந்த ஆட்களுக்கு வருமான உருவாக்கத்துக்கான பிரவேசத்தை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.


## 1.3 பிரதான பணிகள்

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஊடாக வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்குதல்.
- வலது குறைந்த இளைஞர் யுவதிகளின் தொழில்சார் செயற்பாடுகளுக்கு புதிய தொழில்நுட்ப முறையியல்களைப் பயன்படுத்திக் கொண்டு நிலவும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்தல்.
- வலது குறைந்த சிறுவர்கள் தொடர்பில் முன்னதாகவே தலையீடு செய்வதன் மூலம் அவர்களை இடையீட்டுக் கல்வியில் ஈடுபடுத்தல்.
- பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள பல்வேறு வலது குறைந்த நிலைமையிலுள்ள ஆட்களுக்கு முழுநேர வதிவிட அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பலப்படுத்தல்.
- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வலது குறைந்தவர்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பிரதேச மட்டத்தில் வலது குறைந்த ஆட்களின் சுயசக்தி அமைப்புக்களை தாபித்தல் மற்றும் பலப்படுத்தல்.
- போதைக்கு அடிமையானவர்களுக்கு வதிவிட புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.
- செவிப்புலனற்றோருக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சைகை மொழிபெயர்ப்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் செவிப்புலனற்றோரின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்தல்.
- வலது குறைந்த ஆட்களின் நலன்புரிக்காக பேணிவரப்படுகின்ற தொண்டர் அமைப்புக்களுக்கு நிதி உதவி வழங்குதல்.
- வயது 60 இற்கு குறைவான கற்புலனற்ற ஆட்களுக்கு கண் வில்லைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மருத்துவ உதவி வழங்குதல். கற்புலனற்ற ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விளையாட்டு, கல்வி, கலாசார நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல், அவர்களின் நிறுவனங்களுக்கு உட்பட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் வேறு நலன்புரி நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
- நாடோடிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய நீதிமன்ற உத்தரவின் பேரில் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சேவை பெறுனர்களிலிருந்து குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோரை சமூகமயப்படுத்தி அவர்களை தேசிய ஊழியப் படையணியில் முனைப்பான பங்காளர்களாக மாற்றியமைத்தல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் சமூகச் சிக்கல்களை இனங்காண்பதற்கான ஆரச்சிய அலகை ஆரம்பித்தல்.
- மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பான பணிகளை முன்னெடுத்தல்.

- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் ஈடுபடுத்தல்.

# 1.4நிறுவன ஒழுங்கமைப்பு

**சமூக சேவைகள் திணைக்களம் - நிறுவன ஒழுங்கமைப்பு**



## 1.5 சமூக சேவைகள் திணைக்களத்தில் காணப்படுகின்ற பிரதான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்

**சமூக சேவைகள் திணைக்களத்தில் உள்ள பிரிவுகள்**

- நிருவாகப் பிரிவு
- சைகை மொழிப் பிரிவு
- சேவைகள் பிரிவு
- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- நிதி மற்றும் கணக்குகள் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

**சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்**

❖ **தொழில் பயிற்சி நிறுவனம்**

- கெட்டவல தொழில் பயிற்சி நிறுவனம்
- வத்தேகம தொழில் பயிற்சி நிறுவனம்
- அமுனுகும்புர தொழில் பயிற்சி நிறுவனம்
- மாதம்பே தொழில் பயிற்சி நிறுவனம்
- சீதுவ தொழில் பயிற்சி நிறுவனம்
- கலவான தொழில் பயிற்சி நிறுவனம்
- தெலம்புயாய தொழில் பயிற்சி நிறுவனம்
- ராகம தொழில் பயிற்சி நிறுவனம்
- மட்டக்களப்பு தொழில் பயிற்சி நிறுவனம்
- கிளிநொச்சி தொழில் பயிற்சி நிறுவனம்
- தோலங்கம்முவ தொழில் பயிற்சி நிறுவனம்

❖ **சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

- நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்
- சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்

❖ **முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம், கொட்டாவ**

❖ **அரவணைப்பு நிலையங்கள்**

- ஜயவிரு செவண அரவணைப்பு நிலையம்
- மனுசத் பியச மகளிர் அரவணைப்பு நிலையம்

❖ **ஜயவிரு சமாதி புனர்வாழ்வளிப்பு நிறுவனம்**

❖ **ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லம்**

### 1.5.1 திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள்

#### 1.5.1.1 நிருவாகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்கத்தின் செயற்பணியின் ஊடாக அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள நோக்கங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் அடைந்துகொள்ளத் தேவையான உதவிச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது நிருவாகப் பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

இதன் போது மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல், திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளை வழங்குவது தொடர்பில் நிருவாகப் பிரிவினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், திணைக்களத்திற்கு உரித்தான காணிகளை சாட்டுதல் செய்துகொள்ளல் மற்றும் அது தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளல் மற்றும் அவை சம்பந்தமான ஆவணங்களைப் பேணிவருதல் போன்ற செயற்பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

#### 1.5.1.2 சைகை மொழிப் பிரிவு

பூரண செவிப்புலனற்ற மற்றும் பேச்சுக் குறைபாட்டைக் கொண்ட ஆட்களுக்கு ஆள்அடையாளத்தை உறுதி செய்வதற்கான அடையாள அட்டை வழங்குதல், பூரண மற்றும் பகுதியளவிலான செவிப்புலனற்ற மற்றும் பேச்சுக் குறைபாட்டைக் கொண்ட ஆட்களுக்கு கல்வி, சமூக, கலாசார சேவைகளை வழங்குவதற்கு மற்றும் மருத்துவ சுகாதாரம் மற்றும் சட்ட வசதிகளை செய்துகொடுப்பதற்கும் இந்த சைகை மொழிபெயர்ப்புச் சேவையைப் பெற்றுக் கொடுப்பது சைகை மொழிப் பிரிவின் முக்கிய செயற்பணியாகும். அதற்கு சமூக சேவைகள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்ற சைகை மொமிபெயர்ப்பாளர்கள் 10 பேர் சேவையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், இவர்களில் ஆறு பேர் தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் ஏனைய அலுவலர்கள் நான்கு பேரும் தலைமை அலுவலகத்தின் சைகை மொழிப் பிரிவிலும் கடமையாற்றி வருகின்றார்கள். செவிப்புலனற்ற ஆட்களின் தொடர்பாடலுக்காக அரச நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்படி சைகை மொழிபெயர்ப்பாளர்களின் மூலம் வழங்கப்படுகின்றது.

#### 1.5.1.3 சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு (சீ.பி.ஆர்.) பிரிவு

சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்புப் பிரிவினால் வலது குறைந்த ஆட்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளித்தல் தேசிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. வீட்டு மட்டத்திலேயே வலது குறைந்த ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தல் மற்றும் சேவை ஆற்றுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் போது வலது குறைந்த ஆட்களை இனங்கண்டு ஒவ்வொரு வலது குறைந்த ஆளுக்கும் புனர்வாழ்வளிக்கும் திட்டங்களைத் தயார் செய்தல், அது சம்பந்தமாக அவர்களின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக பயிற்சியளித்தல், சமூகமயப்படுத்தத் தேவையான ஒருங்கிணைப்பு மற்றும் அவரை சாதாரண ஒரு நபராக பொருளாதாரத்திற்கு பங்களிப்பைப் பெற்றுக் கொண்டு பிரதான நீரோட்டத்தில் இணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வதும் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது அவர்களுக்குத் தேவையான சேவைகள் மற்றும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்காக கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரை அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டமொன்று உள்ளது. அவ்வாறே பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பலப்படுத்தல், சுயசக்தி அமைப்பு என்ற பெயரில் வலது குறைந்தவர்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒன்றிணைத்தல் மற்றும் பலப்படுத்தல் மற்றும் தேசிய ரீதியில் பாராட்டுவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.5.1.4 சேவைகள் பிரிவு

இலங்கை முழுவதிலும் பரந்துள்ள ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிப்புறு நிலைக்கு ஆளாகியுள்ள ஆட்களை அரச அனுசரணையின் கீழ் பலப்படுத்தி பெருமைமிக்க பிரசைகளாக வாழ்வதற்கான உரிமையை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு சேவைசார் பிரிவு இயங்கி வருகின்றது. இதன் போது பின்வரும் செயற்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- வயது 16-35 இற்கு இடைப்பட்ட வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்குதல்.
- வலது குறைந்த சிறுவர்களின் முன் தொழில் பயிற்சித் திறமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்தல்.
- தொழில் பயிற்சியை பூர்த்தி செய்துள்ள பயிலுனர்களை தொழில் வாய்ப்புக்களில் (சுயதொழில் மற்றும் நிறுவனமயப்படுத்திய) ஈடுபடுத்தல் மற்றும் அது பற்றிய பின்னாய்வை மேற்கொள்ளல்.
- வலது குறைந்த சிறுவர்களை பாலர் பாடசாலை கல்வி மற்றும் பாடசாலை கல்வி வரை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் ஊடாக சேவைகளை வழங்குதல்.
- போதைவஸ்துப் பயன்பாட்டைத் தடுப்பதற்கு போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கின்ற நிலையங்களின் ஊடாக புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல் தொடர்பான சேவைகளை வழங்குதல்.
- வலது குறைந்த சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள விசேட கல்விப் பிரிவு/ அரசசார்பற்ற பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களின் சேவைகளை பாராட்டல் மற்றும் ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்தல்.
- பெற்றோர் / பாதுகாவலர்களை இழந்துள்ள வலது குறைந்த புத்திக் குறைவான ஆண் /பெண்களுக்கு அரவணைப்பு நிலையங்களின் ஊடாக தேவையான அரவணைப்புச் சேவைகளை வழங்குதல்.

- நாடோடிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய தவறாளியாக்கப்படுகின்ற ஆட்களுக்கு தடுத்துவைத்தல் இல்லச் சட்டத்திற்கு அமைய அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல், பலப்படுத்தல் மற்றும் சமூகமயப்படுத்துவதன் மூலம் நல்லதொரு வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்பத் தேவையான சேவைகளை ஆற்றுதல்.
- வலது குறைந்த சமுதாயத்தினருக்காக இயங்கி வருகின்ற தொண்டர் அமைப்புக்களுக்கு பராமரிப்பு உதவிகளை வழங்கி குறித்த நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சமூக சேவைக்கு அரச அனுசரணையை வழங்குதல்.

### 1.5.1.5 அபிவிருத்திப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயற்பாட்டிலும் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல்வேறு செயற்பணிகள் அபிவிருத்திப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. திணைக்களத்தின் செயற்றிட்டம், முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்தல், அலுவலர்களின் திறன் அபிவிருத்திக்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சியளிப்புக்கள், அறிவை இற்றைப்படுத்தல், விளைதிறனை அபிவிருத்தி செய்தல் போன்ற இங்கு முக்கியமானவையாகும்.

மேலும், மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிப்பது தொடர்பான பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல், அரச சார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்பு மற்றும் வழிப்படுத்தல், பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் போன்ற பல்வேறு செயற்பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

### 1.5.1.6 நிதி மற்றும் கணக்குகள் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வருடாந்த ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல், முகாமைத்துவம் செய்தல், கொடுப்பனவுகளை செலுத்துவதுடன், திணைக்களத்தின் கணக்குகளை வெளிப்படைத்தன்மையுடன் பேணிவருவது மற்றும் நிதிப் பிரமாணங்களின் மூலம் கணக்கீட்டு அலுவலருக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதிக் கட்டுப்பாட்டுடன் பேணிவருவது நிதி மற்றும் கணக்குகள் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற முக்கிய செயற்பணியாகும்.
இங்கு பிரதம கணக்காளரின் வழிகாட்டல், முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் வழிப்படுத்தலின் கீழ் நிதி மற்றும் கணக்குகள் பிரிவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிதி ஒழுங்குவிதிகள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரசின் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு இணங்க சகல கொள்வனவுகளின் போதும் வெளிப்படைத் தன்மையுடன் பெறுகை செயன்முறையை அமுல்படுத்தல் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற அரச சொத்துக்களை இற்றைப்படுத்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கணக்குகளைப் பேணிவருவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 1.5.1.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக மேற்படி சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நி.பி. 133 மற்றும் 134 இற்கமைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ள தத்துவங்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் நியதிகளுக்கு அமைய கணக்காய்வு நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.1.8 ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் செயற்பணிக்கமைய நடவடிக்கை மேற்கொண்டு சமூகத்தில் காணப்படுகின்ற சிக்கல்கள் தொடர்பாக ஆய்வு ரீதியாக கற்கைகளை மேற்கொண்டு அதற்கு உகந்த தீர்வுத் திட்டங்கள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்வதும், அரச கொள்கைகளை வகுப்பதற்குப் பங்களிப்பு வழங்கும் நோக்கத்துடன் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஆராய்ச்சிக் குழவொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. அதற்காக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக சமூக சேவை அலுவலர்கள் 25 பேரைக் கொண்ட குழு இதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறே, சமூகத்தில் போதைவஸ்து ஒழிப்புக்காக மாவட்ட மற்றும் பிரதேச ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் அதற்குரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய வைபவங்கள் தொடர்பான ஊடக அறிவித்தல்கள் மற்றும் ஊடக நடவடிக்கைகள் பற்றிய ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும்.

### 1.5.1.9 மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பித்தல்

வலதுகுறைந்த ஆட்கள் பற்றிய அரச கொள்கைக்கு அமைய "ஒன்றாக கைவிடாது" எனும் எண்ணக்கருவுக்கு அமைய வலதுகுறைந்த ஆட்களின் உரிமைகளைப் பாதுகாத்து சமூக இடையீட்டுக்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இதன் போது சுமார் 9 இலட்சமாக உள்ள பல்வேறு வலதுகுறைந்த ஆட்களில் (2024 சனத்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு) வலதுகுறைந்த சிறுவர்கள் உள்ள பெற்றோருக்கு உகந்த தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை இழப்பதும் வலதுகுறைந்த சிறுவர்களை முழுநேர அடிப்படையில் அரவணைப்புச் செய்ய வேண்டி ஏற்படுவதனாலும் குறித்த பெற்றோர் உளரீதியாகவும் அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளார்கள்.

அவர்களுக்கு உளவில் நிவாரணம் வழங்கும் வகையில் மற்றும் அவர்களை பொருளாதார நடவடிக்கையொன்றில் ஈடுபட்டு ஊழியப் படையின் ஒரு பகுதியினராக்கும் நோக்கத்துடன்

சனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, திருகோணமலை, கேகாலை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய 8 மாவட்டங்களிலும் உத்தேச திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 1.5.2 திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

### 1.5.2.1 தொழில் பயிற்சி நிறுவனங்கள்

வலது குறைந்த இளைஞர் யுவதிகளின் உரிமைகளை பாதுகாத்து கௌரவமாக சமூகத்தில் எழுந்திருப்பதற்கு இடவசதிகளை செய்துகொடுத்து அவர்களை தேசிய ஊழியப்படையணியின் ஆக்கபூர்வமான பங்காளர்களாக மாற்றியமைப்பதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவனங்கள் 11 மூலம் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.
இதன் போது வலது குறைந்த இளைஞர், யுவதிகளை தமது வீட்டுக்கும், சமுதாயத்திற்கும் பயன்மிக்க பிரசைகளாக வாழ்வதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்காக 18-35 வயதுக்கு இடைப்பட்ட வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. தொழில் பயிற்சி பெறும் பயிலுனர்களுக்கு உணவும், குடிபானமும், சீருடை மற்றும் சேவை பெறுபவர்களுக்கான கொடுப்பனவும் இதன் கீழ் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

**தொழில் பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள்**

| தொடர் இல. | தொழில் பயிற்சி நிறுவகம் | நடாத்தப்படும் பாடநெறி | பாடநெறி காலம் | நிறுவனத்தின் கொள்ளளவு | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுனர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | அமுனுகும்புர | ஆடை தைத்தல் | 01 வருடம் | 100 | ஆ/பெ |
| | | கமத்தொழில் | 02 வருடம் | | |
| | | சீமேந்து சார்ந்த வடிவமைப்புக் கலை | 02 வருடம் | | |
| | | உபசரணை கலை | 01 வருடம் | | |
| | | கிறபிக் வடிவமைப்புக் கலை | 02 வருடம் | | |
| | | பேக்கரி உற்பத்தி/உணவுத் தொழில்நுட்பம் | 01 வருடம் | | |
| 2 | வத்தேகம | தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | | |
| | | தச்சுத் தொழில் | 02 வருடம் | | |
| | | ஆடை தைத்தல் | 02 வருடம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆடை தைத்தல் | 01 வருடம் | 100 | ஆ/பெ |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | கைப்பணிக் கலை | 01 வருடம் | | |
| | | பத்திக் வடிவமைப்புக் கலை | 01 வருடம் | | |
| | | அழுங்காரக் கலை | 02 வருடம் | | |
| | | **கமத்தொழில் - சகல பயிலுனர்களுக்குமான பொதுவான பாடநெறி** | | | |
| 3 | கெட்டவல | தச்சுத் தொழில் | 02 வருடம் | 50 | ஆண் |
| | | மோட்டார் சைக்கில் மற்றும் முச்சக்கர வண்டி தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | | |
| | | மோட்டார் வாகனங்களுக்கு வர்ணம்தீட்டல் | 02 வருடம் | | |
| | | உருக்கியொட்டுதல் | 02 வருடம் | | |
| | | மோட்டார் வாகன தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | | |
| | | இயந்திரக் கலை | 02 வருடம் | | |
| | | **கமத்தொழில் - சகல பயிலுனர்களுக்குமான பொதுவான பாடநெறி** | | | |
| 4 | தெலம்புயாய | தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | 100 | ஆ/பெ |
| | | ஆடை தைத்தல் | 02 வருடம் | | |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | கைப்பணிக் கைத்தொழில் கலை (மனங்கவர்) | 01 வருடம் | | |
| | | கமத்தொழில் | 02 வருடம் | | |
| | | வீட்டு மின் சுற்றுத் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | பேக்கரி உற்பத்தி/உணவுத் தொழில்நுட்பம் | 01 வருடம் | | |
| | | வியாபார உதவியாளர் | 01 வருடம் | | |
| 5 | சீதுவ | தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | 130 | ஆ/பெ |
| | | குளிருட்டி மற்றும் வளிச்சீராக்கி இயந்திரம் திருத்தல் | 02 வருடம் | | |
| | | தையல் இயந்திரம் இயக்குதல் (தொழில்சாலை – ஜுக்கி) | 01 வருடம் | | |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | தச்சுத் தொழில் | 02 வருடம் | | |
| | | கைப்பணிக் கைத்தொழில் கலை (மனங்கவர்) | 01 வருடம் | | |
| | | வீட்டு மின் சுற்றுத் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | உடல் பிடித்துவிடல் சிகிச்சைமுறை | 01 வருடம் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கையடக்கத் தொலைபேசி திருத்தல் | 02 வருடம் | | |
| 6 | மாதம்பே | தையல் இயந்திரம் இயக்குதல் (தொழில்சாலை – ஜுக்கி) | 01 வருடம் | 40 | ஆ/பெ |
| | | ஆடை தைத்தல் | 02 வருடம் | | |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| | | **கைப்பணிக் கைத்தொழில் கலை (மனங்கவர்)** | 01 வருடம் | | |
| 7 | ராகம | தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | 24 | ஆ/பெ |
| | | ஆடை தைத்தல் | 02 வருடம் | | |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| 8 | கலவான | கமத்தொழில் | 01 வருடம் | 30 | ஆண் |
| | | **கைப்பணிக் கைத்தொழில் கலை (தேங்காய்)** | 01 வருடம் | | |
| 9 | மட்டக்களப்பு | தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை | 02 வருடம் | 50 | ஆ/பெ |
| | | ஆடை தைத்தல் | 02 வருடம் | | |
| 10 | கிளிநொச்சி | ஆடை தைத்தல் | 02 வருடம் | 50 | ஆ/பெ |
| | | தகவல் தொழில்நுட்பம் | 02 வருடம் | | |
| 11 | தோலங்கமுவ | பத்திக் வடிவமைப்புக் கலை | 01 வருடம் | 20 | ஆ/பெ |
| | | **கைப்பணிக் கைத்தொழில் கலை (மனங்கவர்) – சகல பயிலுனர்களுக்குமான பொதுவான பாடநெறி** | | | |

- ராகம தொழில் பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிக் காலம் 06 மாதம் முதல் 01 வருடம் வரையாக மாற்றமடைய முடியும்.

## 1.5.2.2 ஜயவிரு செவண அரவணைப்பு இல்லம்

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள ஜயவிரு செவண நிறுவனம் பெற்றோரின் அரவணைப்பை இழந்துள்ள பல்வேறு வலது குறைந்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வயது மட்டங்களையும் சேர்ந்த ஆண்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

வாழ்நாள் முழுவதிலும் தங்கியிருக்கும் இவர்களை தனிமைப்படுத்தாது அன்புடனும், பாசத்துடனும் அரவணைப்புச் செய்யப்படுகின்றார்கள் என்பதுடன் நாளாந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அரவணைப்புப் பெறும் காலப்பகுதிக்குள் வதிவிட வசதிகள் உட்பட உணவு, குடிபானம், மருத்துவ வசதிகள் போன்றன இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

### 1.5.2.3 மனுசத் பியச பட்டுகம்மன ரியன்சி அழகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையம்

இரத்தினபுரி மாவட்டத்தின் பலங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள மனுசத் பியச பட்டுகம்மன ரியன்சி அழகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையம் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்து நாடு முழுவதிலும் வாழ்ந்து வருகின்ற 16-59 வயதுக்கு இடைப்பட்ட வலது குறைந்த பெண்களுக்கு அரவணைப்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இயங்கிவருகின்றது. மேலும், அரவணைப்புப் பெறும் காலப்பகுதியில் தங்குமிட வசதிகள் உட்பட உணவு, குடிபானம் மற்றும் மருத்துவ வசதிகளும் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

### 1.5.2.4 ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லம்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லமானது, நாடோடி கட்டளைச் சட்டத்திற்கு அமைய நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்படுகின்ற ஆட்களுக்கு, தடுத்துவைத்தல் இல்லம் சட்டத்தின் கீழ் அரவணைப்பு வழங்கப்படுகின்ற மத்திய அரசின் கீழ் இயங்கி வருகின்ற ஒரே நிறுவனமாக உள்ளது. தற்போது சேவை பெறுவோர் சுமார் 500 பேருக்கு இங்கு அரவணைப்பு வழங்கப்படுகின்றது.

அரவணைப்புப் பெறுகின்ற பெரும்பாலானோரின் வாழ்வாதாரமாக யாசகம் பெறுவதில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதுடன், சிறிய தொழில்களில் ஈடுபட்டிருந்த ஒரு சிலர் காணப்படுகின்ற போதிலும் நகரத்தின் பகிரங்க இடங்களில் வாழ்வதன் காரணமாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 60% ஆன பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆவார்கள். வயதாதல் மற்றும் பல்வேறு நோய்கள் (சமூக நோய்கள்) ஏற்பட்டதன் காரணமாக யாசகம் பெறுவதில் ஈடுபட்டுள்ளதனால் இவர்களும் நீதிமன்றத்தினால் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள்.

மேற்படி சேவை பெறுவோரில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையானோரை தேசிய ஊழியப் படையின் பங்காளர்களாக மாற்றியமைப்பதற்காக அறிவு, திறமை, மனப்பாங்கு அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சியும் இவர்களுக்காக வழங்கப்படுகின்றது. மேலும் குறித்த சேவை பெறுநர்கள் தொடர்பான சம்பவக் கற்கைகளை மேற்கொண்டு, உபசரணைத் திட்டங்களைத் தயார் செய்து குறித்த சேவை பெறுநர்களில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையானவர்களையேனும் சமூகமயப்படுத்த முறையான வேலைத்திட்டமொன்று தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### 1.5.2.5 ஜயவிரு சமாதி புனர்வாழ்வளிப்பு நிறுவனம்

கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில், புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள ஜயவிரு சமாதி புனர்வாழ்வளிப்பு நிறுவனம், போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தல், தொழில்சார் திறமைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.
இந்த நிறுவனத்திற்கு நீதிமன்ற உத்தரவின் பேரில், தொண்டர் அடிப்படையில், பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பிவைக்கப்படுகின்ற சேவை பெறுநர்களுக்கு ஒரே தடவையில் சுமார் 70 பேருக்கு புனர்வாழ்வளிக்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளதுடன், புனர்வாழ்வளிப்புக் காலஎல்லை 06 மாத காலமாகும். நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பிவைக்கப்படுகின்ற சேவை பெறுநர்களின் புனர்வாழ்வளிப்புக் காலத்தை தீர்மானம் செய்வது நீதிமன்ற உத்தவிற்கு இணங்கவாகும்.
உண்மையான வாழ்க்கைசார் நோக்கு மற்றும் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியை கற்றுக் கொடுத்தல் மற்றும் ஆற்றல்களை மெருகூட்டுவதன் மூலம் போதை மீதான ஈடுபாட்டைக் குறைத்து, போதைக்கு அடிமையான இளம் சமுதாயத்தினரை தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துகொள்வது இந்த நிறுவனம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 1.5.2.6 சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள்

ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் ஏதேனும் சிக்கல் அல்லது தாமதம் ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அதற்காக முன்னதாகவே தலையீடு செய்து பிள்ளையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் 02 நிறுவனங்களின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சரியான வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் நிறுவனத்திற்கு வருகைதருகின்ற பிள்ளைகளின் தேவைகளை இனங்கண்டு வளர்ச்சி நிலைமையின் சரியான மதிப்பீட்டை உறுதி செய்துகொண்டதை அடுத்து பிள்ளையின் அபிவிருத்திக்குத் தேவையான சேவைகள் தொடர்பில் நேரடியான மற்றும் மறைமுகமான தலையீடும் மேற்கொள்ளப்படுவதுடன், பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உளவியல் நிலைமையை மென்மேலும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே சேவை ஆற்றப்படுகின்ற சிறுவர்கள் நல்ல முறையில் அபிவிருத்தியடைந்த பின்னர் விசேட பாடசாலைகளுக்கு, விசேட கல்வி அலகுகளுக்கு மற்றும் சாதாரண பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்.

- **நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

கொழும்பு மாவட்டத்தில், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், நாவின்ன. பதிரகொட பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 06 மாதம் முதல் 16 வயது வரையான பிள்ளைகள் சுமார் 100 பேருக்கு வருடாந்தம் சேவைகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

- **சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், ஓலுவில வீதி, மல்பெத்தாவ பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டில் 06 மாதம் முதல் 16 வயது வரையான பிள்ளைகளுக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டு வருவதுடன் வயது 14 முதல் 30 வரையான வயதைச் சேர்ந்த வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு முன் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 1.5.2.7 கொட்டாவ முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம்

கொழும்பு மாவட்டத்தின் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள கொட்டாவ திறன் அபிவிருத்தி நிலையமானது, வயது 14-30 இற்கு இடைப்பட்ட வலகு குறைந்த இளைஞர், யுவதிகளை எதிர்காலத்தில் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான முன் ஆயத்தப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும்.
ஆரம்ப மதிப்பீட்டை அடுத்து தெரிவு செய்யப்படுகின்ற சேபை பெறுநர்களுக்கு மூன்று வருட காலப்பகுதியில் தேவையான திறமைகளை அபிவிருத்தி செய்து சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் வேறு நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள் என்பதடன், தொழில் பயிற்சியில் ஈடுபடாத சிறுவர்களுக்கு அன்றாட வாழ்க்கைத் திறன்களை அபிவிருத்தி செய்து வெற்றிகரமான ஆளொருவராக சமூகமயப்படுத்தப்படுவார்கள்.

## 1.6 திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிதியங்கள்

### 1.6.1 கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் 1992 இன் 09 ஆம் இலக்க கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.
இச் சட்டத்திற்கு அமைய இலங்கையில் வாழும் கற்புலனற்ற ஆட்களுக்கான பல்வேறு சேவைகளையும் அமுல்படுத்தி சமூக சேவைகள் விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கும் ஒரு குழுவின் ஊடாக நிருவகிக்கப்படுகின்ற இந்த நிதியம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் கீழ் பேணிவரப்படுகின்றது. இந்த நிதியத்தினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்ற.

i. கற்புலனற்ற ஆட்களுக்கு தொழில் பயிற்சி வழங்குதல்.

ii. கற்புலனற்றோர் அமைப்புக்களுக்கு விளையாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்

iii. கல்வி மற்றும் கலாசார உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

iv. புனர்வாழ்வளிப்பு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

v. கண் வில்லை மற்றும் கண் சிகிச்சைகளுக்கு உதவி வழங்குதல்.

vi. சர்வதேச வெண்பிரம்பு தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தல்.

## 1.7 வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி பெறும் கருத்திட்டங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

### 1.7.1 வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி பெறும் கருத்திட்டங்கள்

- கருத்திட்டத்தின் பெயர் : Project for Promoting Employment Support of Persons with Disabilities in Sri Lanka (ESPD)
- பங்களிப்பு செய்யும் முகவர் நிறுவனம் : யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு ன்றம்(JICA) தொழில்நுட்ப அறிவை மாத்திரம் வழங்குதல்.
- கருத்திட்டக் காலம் :- 4 வருடம் (2021 நவம்பர் - 2025 நவம்பர்)

வலது குறைந்த ஆட்களின் தொழில் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக தனியார் துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் பிரதான நோக்கத்துடன் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் ஆகியன இணைந்து வலது குறைந்த சமுதாயத்தினருக்கு தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தியுள்ள கருத்திட்டமாகும்.

அதற்கமைய இக்கருத்திட்டக் காலம் 2025 நவம்பர் மாதம் நிறைவடைந்துள்ளதுடன், மேற்படி நடவடிக்கைகளை தொடர்ச்சியாகப் பேணிவருவதற்காக சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனிதவலு மற்றும் தொழில் வாய்ப்புத் திணைக்களம் ஆகிய உடன்படிக்கை செய்துகொண்டு தொழில் மேம்பாட்டு அலகொன்றாக புதுப் பொழிவுடன் இயங்கிவருகின்றது.

### 1.7.2 அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

**ChildFund நிறுவனம் -**

- தொண்டர் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதனாசிரியர்கள் 8 பேருக்கு ரூபா 40,000.00 வீதம் கொடுப்பனவு செலுத்தல்

- வலதுகுறைந்தவர்களின் தேசிய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிக்கு அனுசரணை வழங்குதல்

**ILO நிறுவனம் -**

- ஆடை உற்பத்தித் துறையில் தொழில்வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்காக அமுனுகும்புர, தெலம்புயாய மற்றும் சீதுவ தொழில் பயிற்சி நிறுனகங்கள் தெரிவு செய்யப்பட்டமை.
- ஆடைத்துறைக்கான பயிற்சி மொடியூலைத் தயார் செய்தமை.

**Gama Pizza Craft நிறுவனம் -**

- அமுனுகும்புர, தெலம்புயாய மற்றும் சீதுவ தொழில் பயிற்சி நிறுனகங்களில் Pizza Hut நிறுவனத்தின் அனுசரணையுடன் தாபிக்கப்பட்டுள்ள உணவுத் தொழில்நுட்ப அலகுகளில் பயிற்சி பெற்றுள்ள வலதுகுறைந்த இளைஞர் யுவதிகள் பயிற்சியின் இறுதியில் தகைமைகளுக்கு அமைய Pizza Hut நிறுவனத்தில் தொழில்வாய்ப்புக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்.

# அத்தியாயம் 02
# முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## சமூக சேவைகள் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

### 2.1. வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற பிரதான நிகழ்ச்சித்திட்டமாக இருப்பது வலது குறைந்த ஆட்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். திணைக்களத்தின் செயற்பணிக்கு இணங்க இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உத்தேச நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உப கருத்திட்டங்கள் சில காணப்படுவதுடன், அவை பின்வருமாறாகும்.


- வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்.
- முன்பிள்ளைப் பருவத்திலேயே ஏற்படுகின்ற வலது குறைந்த நிலைமைகளை இனங்காணத் தேவையான தலையீடுகள் மற்றும் சிகிச்சைசார் சேவைகளை உள்ளடக்கிய சிறுவர் வழிகாட்டல்.
- வலது குறைந்த இளைஞர், யுவதிகளின் முன் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்தல்.
- பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள வலது குறைந்த ஆட்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- சைகை மொழியை மேம்படுத்தல்.
- வலது குறைந்த ஆட்களின் நலன்புரிக்காக பேணிவரப்படுகின்ற தொண்டர் அமைப்புக்களுக்கு நிதி உதவி பெற்றுக் கொடுத்தல்.
- வலது குறைந்த ஆட்களுக்கான சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
- கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம் ஊடாக கற்புலனற்ற சமுதாயத்தினருக்கு புனர்வாழ்வளித்தல்.
- நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தவறாளியாக்கப்படுகின்ற ஆட்களுக்கு அரவணைப்பைச் செய்துகொடுத்தல், ஆட்களை சமூகமயப்படுத்தல்
- வலது குறைந்த பிள்ளைகளின் விளையாட்டு மற்றும் கலைத் திறமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

### 2.1.1 வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்

சமூக சேவைகள திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற முன்னோடிக் கருத்திட்டமொன்றாக இருப்பது வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சியளிப்பதாகும். நாடு முழுவதிலும் பரந்துள்ள தொழில் பயிற்சி நிறுவனங்கள் 11 இன் ஊடாக வருடாந்தம் வலது குறைந்த இளைஞர் யுவதிகள் சுமார் 600 பேருக்கு தொழில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

2025 கல்வி ஆண்டுக்கு புதிய பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் மற்றும் பாடநெறியை ஆரம்பித்து வைப்பது 2025 சனவரி மாதம் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி கல்வி ஆண்டுக்கான ஒரு வருட பாடநெறி 2025 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

**2025 இல் தொழில் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களின் எண்ணிக்கை**




2025 ஆம் ஆண்டு தொழில் பயிற்சியைப் பெற்ற பயிலுனர்கள் எண்ணிக்கை 496 ஆகும். மேற்படி பயிலுனர்களில் தொழில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பயிலுனர்களின் எண்ணிக்கை 261 பேர் ஆகும். இளைஞர், யுவதிகளை தனியார் துறையில் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல், அவ்வாறு தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடாத சேவை பெறுநர்களுக்கு சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கான கருவிகள், உபகரணத் தொகுதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2.1.2 சிறுவர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தினால் சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் 02 இன் ஊடாக சிறுவர் வழிகாட்டல் மற்றும் சிகிச்சையளித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### 1. நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்

2025 ஆம் ஆண்டு நிறுவனத்தினால் சேவையாற்றப்பட்ட மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 109 பேர் ஆகும் என்பதுடன் இதில் புதிய சேவை பெறுநர்களாக பதிவு செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 46 பேர் ஆகும். மேற்படி சேவை பெறுநர்களில் எட்டு (8) பேர் சாதாரண பாடசாலைகள் மூலமும், ஒருவர் (1) பாலர் பாடசாலைக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 1.1 நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிறுவனத்தினால் 2025 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

- சேவை பெறுநர்களின் பெற்றோருக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- நடமாடும் பல் மருத்துவ முகாம்களுக்கு சிறுவர்களை ஆற்றுப்படுத்தல்.
- சித் ரூ தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் சிறுவர்களின் கலை திறமைகளை சமர்ப்பித்தல்.
- சிறுவர்களின் கைப்பணி மற்றும் ஆக்கக் கண்காட்சிகளை நடாத்தல் (நாவின்ன நிறுவன வளவு, சமூக சேவைகள் திணைக்கள வளவு மற்றும் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை வளவு)
- பல்வேறு சமய மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல். (வெசாக், பொசொன், எசல, புத்தாண்டு நிகழ்வுகள், நத்தார் நிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்)

**நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

**2025 ஆம் ஆண்டு பதிவு செய்த புதிய சேவைபெறுநர்களின் எண்ணிக்கை 46 (ஆண் பிள்ளைகள் 29, பெண் பிள்ளைகள் 17)**

| வயதெல்லை (வருடம்) | வலது குறைந்த தன்மை | | | | | | | | | மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓடிசம் | பெருமூளை பக்கவாத | டவுன் சின்ட்ரம் | வளர்ச்சித் தாமதம் | பேச்சுக் கோளாறு | மிகை செயற்பாடு | செவிப்புல. | புத்திக் குறைபாடு | வேறு | |
| **0 – 03** | - | - | 01 | 01 | - | 01 | - | - | - | **03** |
| **03 – 05** | 04 | 01 | 04 | 05 | 01 | - | - | - | - | **15** |
| **05 - 15** | 11 | 02 | 03 | 09 | - | 02 | - | - | - | **27** |
| **15 - 18** | - | - | - | - | - | - | - | - | - | **-** |
| **18 இற்கு மேல்** | - | - | - | 01 | - | - | - | - | - | 01 |
| **மொத்தம்** | **15** | **03** | **08** | **16** | **01** | **03** | **-** | **-** | **-** | **46** |

## நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்

## 2025 ஆம் ஆண்டுக்கான மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 109 (ஆண் பிள்ளைகள் 67, பெண் பிள்ளைகள் 42)

| வயதெல்லை (வருடம்) | வலது குறைந்த தன்மை | | | | | | | | | மொத்த சிறுவர்கஹின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓடிசம் | பெருமூளை பக்கவாதம் | டவுன் சின்ட்ரம் | வளர்ச்சித் தாமதம் | பேச்சுக் கோளா | மிகை செயற்பாடு | செவிப்புலன் | புத்திக் குறைபாடு | வேறு | |
| **0 - 03** | - | - | 01 | 02 | - | - | - | - | 01 | **04** |
| **03 - 05** | 03 | 03 | 04 | 04 | 01 | 02 | - | - | - | **17** |
| **05 - 15** | 17 | 08 | 21 | 16 | 03 | 03 | - | - | 02 | **70** |
| **15 - 18** | 04 | 01 | 02 | 03 | - | - | - | - | - | **10** |
| **18 இற்கு மேல்** | 01 | 04 | 02 | 01 | - | - | - | - | - | **08** |
| **மொத்தம்** | **25** | **16** | **30** | **26** | **04** | **05** | **-** | **-** | **03** | **109** |

## நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்

## ஒவ்வொரு பிரிவின் மூலமும் வழங்கியுள்ள சேவைகள் பற்றிய விபரம்

| வழங்கப்பட்ட சேவை | சிறுவர்களின் எண்ணிக்கை | சேவை தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| இயன்மருத்துவ சேவை | 109 | 349 |
| பேச்சுச் சிகிச்சை சேவை | | - |
| தொழில்சார் சிகிச்சை சேவை | | - |
| கல்விச் சேவை | | 5510 |
| நாளாந்த நடவடிக்கைகளை பயிற்றுவித்தல் | | 1321 |
| ஆலோசனை சேவை | | 83 |

**2. ஹம்பாந்தோட்டை ‘சிதிஜய’ சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

2025 ஆம் ஆண்டு சேவையாற்றப்பட்ட மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 87 பேர் ஆவார்கள் என்பதுடன், மேற்படி சேவை பெறுநர்களில் 31 பேர் புதிதாக பதிவு செய்துகொண்டவர்களாவார்கள். குறித்த சேவை பெறுநர்களான பிள்ளைகளின் நான்கு (04) பேரை சாதாரண பாடசாலைகளிலும், நான்கு (04) பேரை பாலர் பாடசாலைகளிலும் அனுமதிக்கத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

2.1 நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற சேவைகளில்,

- பேச்சுச் சிகிச்சை சேவை, தொழில்சார் சிகிச்சை மற்றும் இயன்மருத்துவ சிகிச்சை சேவைகள் வழங்குதல்.
- சேவை பெறுநர்களின் பெற்றோர் மற்றும் பதவியணியினருக்கு உளவியல் நலனுக்கான ஆலோசனை, கல்வி மற்றும் களியாட்ட சுற்றுலா.
- ஆயர்வேத சிகிச்சை முகாம்களை நடாத்தல், விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- சுய தொழில்வாய்ப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- Shelter Work Shop கருத்திட்டத்தை அமுல்படுத்தல்.
- பல்வேறு சமய மற்றும் கலாசார நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் (வெசாக், பொசொன், புத்தாண்டு நிகழ்வுகள், சிறுவர் தின வைபவங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள்)

**சிதிஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

**2025 ஆம் ஆண்டு பதிவு செய்த புதிய சேவைபெறுநர்களின் எண்ணிக்கை 31 (ஆண் 20, பெண் 11)**

| வயதெல்லை (வருடம்) | வலது குறைந்த தன்மை | | | | | | | | | மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓடிசம் | பெருமூளை பக்கவாதம் | டவுன் சின்ட்ரம் | வளர்ச்சித் தாமதம் | பேச்சுக் கோளாறு | மிகை செயற்பாடு | செவிப்புலன் | புத்திக் குறைபாடு | வேறு | |
| **00-05** | 04 | - | 02 | 01 | - | - | - | - | - | **07** |
| **05-10** | 02 | - | 02 | - | - | 03 | | | 07 | **14** |
| **10-15** | 01 | - | 01 | - | - | 01 | - | - | 03 | **06** |
| **15-20** | - | - | - | 02 | - | - | - | - | 02 | 04 |
| **மொத்தம்** | **07** | **-** | **05** | **03** | **-** | **04** | **-** | **-** | **12** | **31** |

மேலும் முன் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக 15 முதல் 20 வயது வரையான இளைஞர், யுவதிகள் இந்த நிலையத்தில் சிகிச்சைகளுடன் பயிற்சியளிக்கப்படுவதுடன், திறன் அபிவிருத்தி மூலம் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**சிதிஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

**2025 ஆம் ஆண்டுக்கான மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 87 (ஆண் பிள்ளைகள் 54, பெண் பிள்ளைகள் 33)**

| வயதெல்லை (வருடம்) | வலது குறைந்த தன்மை | | | | | | | | | மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓடிசம் | பெருமூளை பக்கவாதம் | டவுன் சிண்ட்ரம் | வளர்ச்சிக் தாமதம் | பேச்சுக் கோளாறு | மிகை செயற்பாடு | செவிப்புலன் | புத்திக் குறைபாடு | வேறு | |
| **00-05** | 04 | - | 02 | 01 | - | - | - | - | - | **07** |
| **05-10** | 05 | - | 05 | 01 | 01 | 05 | - | - | 15 | **32** |
| **10-15** | 03 | - | 01 | 02 | 01 | 06 | - | - | 14 | **27** |
| **15-20** | 02 | - | 01 | 03 | - | - | - | - | 15 | 21 |
| **மொத்தம்** | **14** | **-** | **09** | **07** | **02** | **11** | **-** | **-** | **44** | **87** |

### 2.1.3 முன் தொழில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

வயது 14-30 இற்கு இடைப்பட்ட இளம் பருவத்தைச் சேர்ந்த வலது குறைந்த சிறுவர்களை தொழில் பயிற்சி நிறுவனங்களில் அனுமதிப்பதற்குத் தேவையான முன் ஆயத்தப்படுத்துவது கொட்டாவ முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் வலது குறைந்த சிறுவர்கள் 36 பேருக்கு தேவையான சேவைகள் ஆற்றப்பட்டதுடன் வலது குறைந்த சேவை பெறுநர்கள் 11 பேர் தொழில் பயிற்சிக்காக திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற தொழில் பயிற்சி நிறுவனங்களில் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதுடன், இவர்களில் 5 பேர் வெற்றிகரமாக தொழல் பயிற்சிப் பாடநெறிகளில் ஈடுபட்டுள்ளார்கள். மேலும், சேவை பெறுநர்கள் 4 பேரை தொழில் பயிற்சிக்காக தொழில் பயிற்சி அதிகாரசபையில் இணைப்பதற்கு இயலுமாயிற்று.

**கொட்டாவ முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம்**

**2025 ஆம் ஆண்டில் சேவையாற்றப்பட்ட மொத்த சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 36 (ஆண் 17, பெண் 19)**

| வயதெல்லை (வருடம்) | வலது குறைந்த தன்மை | | | | | | | | | மொத்த சிறுவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓடிசம் | பெருமூளை பக்கவாதம் | டவுன் சிண்ட்ரம் | வளர்ச்சிக் தாமதம் | பேச்சுக் கோளாறு | மிகை செயற்பாடு | செவிப்புலன் | புத்திக் குறைபாடு | வேறு | |
| **14-20** | - | 06 | 05 | 01 | 02 | - | 01 | 01 | | **16** |
| **21-30** | - | 02 | 05 | 02 | 01 | 03 | - | 01 | 01 | **15** |
| **30 இற்கு மேல்** | | 03 | 02 | | | | | | | **05** |
| **மொத்தம்** | **-** | **11** | **12** | **03** | **03** | **03** | **01** | **02** | **01** | **36** |

**கொட்டாவ முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம்**

**ஆற்றப்பட்ட சேவைகள் பற்றிய தகவல்கள்**

| தொடர் இல. | செயற்பாடு | உப செயற்பாடு |
|---|---|---|
| **01** | சுய உதவித் திறன் அபிவிருத்தி | • உணவு உட்கொள்ளல், ஆடை அணிதல், உணவு சமைத்தல், ஆளுமை அபிவிருத்தி, மலசலகூடம் பயன்படுத்தல், தனிப்பட்ட சுகாதாரம், பொதுச் சூழலில் நடந்துகொள்ளல் |
| **02** | சுற்றாடல் செயற்பாடு | • கமத்தொழில் (பயிர் செய்கை), சிரமதானம், சுற்றாடல் அழங்கரிப்பு, மலர் பயிரிடல் |
| **03** | தொணிப்பொருள் அடிப்படையிலான எண்ணக்கரு | • சரியாக எழுத்துக்களை எழுதுதல், சொற்கள் உச்சரிப்பு, பல்வேறு எண்ணக்கருக்களைப் புரிந்துகொள்ளல், எண்களை புரிந்துகொள்ளல், வடிவங்களை புரிந்துகொள்ளல், வர்ணங்களை இனங்காணல் |
| **04** | தொணிப்பொருள் அடிப்படையிலான செயற்பாடுகள் | • தொணிப்பொருள் தொடர்பான ஆக்கங்களை உருவாக்கும் செயற்பாடுகள்<br>• அசைவுச் செயற்பாடுகளை மேம்படுத்தும் கைவேலைச் செயற்பாடுகள் |
| 05 | சமூகத் திறன்கள் | • சமஅந்தஸ்துசார் வளர்ச்சி, ஒற்றுமையை வளர்த்தல், தொடர்பாடல் திறன் விருத்தி, கூறுணர்வு மற்றும் உணர்வை இனங்காணல், போக்குவரத்து பற்றிய புரிந்தணர்வு, அவசர சந்தர்ப்பங்களுக்கு ஆயத்தமாவதற்கான செயற்பாடுகள் |
| 06 | ஆளுமை அபிவிருத்தி | • தலைமைத்துவத் திறமைகள், விளையாட்டுத் திறமைகளை வளர்த்தல், உடல்சார் ஆரோக்கியம், குழுச் செயற்பாடுகள், மாதாந்த இலக்கிய சங்கங்களை நடாத்தல் |
| 07 | அழகியற்கலை திறன்கள் அபிவிருத்தி | • பாடல், இசைத்தல், நடனம், சித்திரம், நாடகம் |
| 08 | ஆன்மீக அபிவிருத்தி | • யோகாப்பியாச நிகழ்ச்சித்திட்டங்கள், யாத்திரைகள் |
| **09** | தொழில் பயிற்சி திறன் அபிவிருத்தி | • விளக்குத்திரிகளை தயாரித்தல், கால்துடைப்பான், மலர் சாடி அழங்காரம், மெழுகுவர்த்தி உற்பத்தி, கைப்பணி ஆக்கங்கள், சிரட்டை சார்ந்த உற்பத்திகள் |

### 2.1.4 தொண்டர் அமைப்புக்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

வலது குறைந்த ஆட்களுக்கு சேவை ஆற்றுவதற்காக நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற தொண்டர் அபிவிருத்தி நிலையங்கள், விசேட அலகுகள் 33 இற்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் கொடுப்பனவுகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

அதற்கமைய 2025 ஆம் ஆண்டு நிறுவனத்தின் தன்மை, தேவைப்பாடு மற்றும் கோரிக்கையின் பேரில், பயிலுனர் கொடுப்பனவு, பராமரிப்புக்கான கொடுப்பனவு, பங்கேற்றலுக்கான கொடுப்பனவு, ஆசிரியர் கொடுப்பனவு, உபசரணை கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| தொடர் இல. | தொண்டர் அமைப்பு | கொடுப்பனவு வழங்கப்படுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சிறுவர் திறன் அபிவிருத்தி நிலையம் | 15 |
| 2 | சிறுவர் வழிகாட்டல் நிலையம் | 03 |
| 3 | விசேட கல்வி நிலையங்கள் /நிறுவனங்கள் /பாடசாலைகள் | 03 |
| 4 | புனர்வாழ்வளிப்பு நிலையங்கள் | 02 |
| 5 | ஏனையன (செவிப்புல சேவைகள் சபை /தேசிய உளவள சபை /அலகுகள் / சுவர்ணதாம மன்றம்/ அபிவிருத்தி மன்றம் | 10 |
| | **மொத்தம்** | 33 |

### 2.1.5 பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்துள்ள புத்திக் குறைபாடுகளைக் கொண்ட ஆட்களுக்கு அரவணைப்பு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற புவக்பிட்டிய ஜயவிரு செவண நிறுவனமானது, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்துள்ள பல்வேறு வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த புத்திக் குறைபாட்டைக் கொண்டுள்ள ஆண் பிள்ளைகள் 80 பேருக்கு ஆயுட் காலம் முழுவதிலும் அரவணைப்புச் சேவைகளை வழங்கி வருகின்றது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சேவைபெறுநர்கள் 80 பேருக்கு அரவணைப்புச் சேவைகளை வழங்கிய நிலையில் நிறுவனம் பேணிவரப்பட்டதுடன், அதற்கமைய 2025 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்தமாக சேவை பெறுநர்கள் 89 பேருக்கு உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகளை வழங்கி அரவணைப்புப் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

திறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த நிறுவனங்களில் உள்ள புத்திக் குறைவான மற்றும் பல்வேறு வலது குறைந்த நிலைமைகளைக் கொண்ட பிள்ளைகளின் நடத்தைசார் ஆற்றல் அபிவிருத்தி மற்றும் எழுத்தறிவை வளர்ப்பதற்கான பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அரவணைப்புப் பெற்ற சேவை பெறுநர்களில் 72 பேர் புத்திக் குறைபாடுடையயவர்களாக இருந்தார்கள் என்பதுடன், 17 பேர் ஏனைய வலது குறைந்த சேவை பெறுநர்களாகவும் இருந்தார்கள். வயது மட்டங்களுக்கு அமைய நிறுவனத்தில் அரவணைப்பைப் பெற்றுக் கொண்டவர்களில் கூடுதலானோர் 31-40 வயதுக்கு இடைப்பட்டவர்களாவார்கள். இது எண்ணிக்கை ரீதியாக 23 ஆகும்.

### புவக்பிட்டிய 'ஜயவிரு செவண' நிறுவனம்
### ஆற்றியுள்ள சேவைகள் பற்றிய தகவல்கள்

| தொடர் இல. | செயற்பாடு | உப செயற்பாடு |
|---|---|---|
| 01 | உடல்சார் அபிவிருத்தி | - மருத்துவ சிகிச்சை சாய்சாலை (வலது குறைந்த மற்றும் வயது மட்டங்களுக்கு அமைய) விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 02 | உளவியல் அபிவிருத்தி | - சமய நிகழ்ச்சித்திட்டங்கள் (தானம் வழங்குதல், தர்மப் போதனை) களியாட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் |

## 2.1.6 பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள புத்திக் குறைபாட்டைக் கொண்ட வலது குறைந்த பெண்களுக்கு அரவணைப்பு வழங்குதல்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கி வருகின்ற மனுசத் பியச பட்டுகம்மன ரியன்சி அலகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையமானது, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்து நாடு முழுவதிலும் பரந்து வாழும் 16-59 வயதுக்கு இடைப்பட்ட புத்திக் குறைபாட்டைக் கொண்ட வலது குறைந்த பெண்களுக்கு அரவணைப்பு சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு இதன் கீழ் சேவை பெறுநர்கள் 35 பேர் அரவணைப்பைப் பெற்றுவருகின்றார்கள். இவர்களுக்கு உணவு, தங்குமிடம், மருத்துவ மற்றும் துப்பரவேட்பாட்டு வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு அரவணைப்பும் வழங்கப்படுகின்றது.

### படுகம்மன ரியன்சி அலகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையம்
### ஆற்றியுள்ள சேவைகள் பற்றிய தகவல்கள்

| தொடர் இல. | செயற்பாடு | உப செயற்பாடு |
|---|---|---|
| 01 | உடல்சார் அபிவிருத்தி | - மருத்துவ சிகிச்சை சாய்சாலை, உடற் பயிற்சி (வலது குறைந்த மற்றும் வயது மட்டங்களுக்கு அமைய) |
| 02 | உளவியல் அபிவிருத்தி | - சமய நிகழ்ச்சித்திட்டங்கள் (தானம் வழங்குதல், பிரித் ஓதுதல், தர்மப் போதனை) திறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டம் |
| 03 | திறன் அபிவிருத்தி | - விளைநாட்டு, அழகியற்கலை, கைப்பணி ஆக்கங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பயிர்செய்கை, வீட்டுத் தோட்டம், சாரணியர் நிகழ்ச்சித்திட்டம் |

## 2.1.7 சைகை மொழி மேம்பாடு

வலது குறைந்தவர்களின் நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள மற்றொரு கருத்திட்டமாக இருப்பது செவிப்புலனற்ற ஆட்களுக்கு சேவைகளை ஆற்றுவதாகும். கற்புல மற்றும் செவிப்புல குறைபாடுகளைக் கொண்டுள்ள சமுதாயத்தினரின் தொடர்பாடலை இலகுபடுத்தி அவர்களுக்கு மென்மேலும் விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு 2025 ஆம் ஆண்டு பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கையில் அரச நிறுவனங்களின் தேவைகளுக்கு அமைய சைகை மொழிபெயர்ப்புச் சேவையைப் பெற்றுக் கொடுத்தல். குறிப்பாக நீதிமன்றம், பொலிஸ், இலங்கை பாராளுமன்றம் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு சேவையாற்றுதல்.
- தேசிய பொழிஸ் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த அலுவலர்களுக்கு சைகை மொழிப் பயிற்சிப் பாடநெறியை நடாத்தல்.
- வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய செயலகத்துன் இணைந்து மேல் மாகாண அரசசேவை அலுவலர்கள் 60 பேருக்கு 06 மாத காலப் பயிற்சிப் பாடநெறியை நடாத்தல்.
- தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு சமிஞ்சை மொழிபெயர்ப்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- பூரண செவிப்புலனற்றவர்களுக்கு செவிப்புலனற்றோருக்கு 38 அடையாள அட்டைகளை வழங்கப்பட்டமை.
- சர்வதேச சமிஞ்சை மொழிபெயர்ப்புத் தின தேசிய வைபவத்தை முன்னிட்டு செவிப்புலனற்றவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிச் செயலமர்வு நடாத்தப்பட்டமை.
- சர்வதேச சைகை மொழித் தின தேசிய வைபவத்தை முன்னிட்டு செவிப்புல மற்றும் பேச்சுக் குறைபாடுகளைக் கொண்ட சமுதாயத்தினரின் பிரச்சினைகளை சமர்ப்பிக்கவென 0706116000 எனும் புதிய தொலைபேசி உதவிச் சேவையை அறிமுகம் செய்தல்.

**வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**

- **செலவுத் தலைப்பு 216 – 02- 03 – 1- 1501 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| தொடர் இல. | செயற்பாடு மற்றும் பௌதீக முன்னேற்றம் | செலவினம் ரூபா |
|---|---|---|
| 01. | தொழில் பயிற்சி, திறன் அபிவிருத்தி நிலையம் மற்றும் சிறுவர் வழிகாட்டல் நிலையத்திற்கு சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்<br>i. மூலப் பொருள் செலவினம்<br>ii. வேறு நலன்புரிச் செலவினங்கள்<br>iii. போதனாசிரியர் பயிற்சிக் கொடுப்பனவு<br>iv. கல்விச் சுற்றுலா | 26.85 |
| 02. | திணைக்களத்தின் கீழ் நிதி அனுசரணை பெறுகின்ற தொண்டர் அமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் உகந்த உதவித் தொகைகளை பெற்றுக் கொடுத்தல்.<br>i. செவிப்புலனற்றோர் சேவைகள் சபை<br>ii. சுவர்தாம மன்றம்<br>iii. மாலமுல்ல செத்சரண அபிவிருத்தி நிலையம்<br>iv. பெந்தர ஸ்ரீ குணரத்ன நாஹிமி நினைவுத் திறன் அபிவிருத்தி நிலையம்<br>v. தனிநபர் அபிவிருத்தி மன்றம் பண்டாரவளை | 0.65 |
| 03. | வலது குறைந்த சிறுவர்களுக்கு சேவையாற்றும் தொண்டர் அமைப்புக்கள், பாலர் பாடசாலைகள், சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள், திறன் அபிவிருத்தி நிலையம்மற்றும் தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்தல். ஆசிரியர்களின் எண்ணிக்கை 57 பேர் ஆகும். | 7.63 |
| 04. | தொழில் பயிற்சி நிறுவனங்களின் உத்தியோகபூர்வ சீருடை – ரீ சேர்ட், பொட்டம் | 3.50 |
| 05. | தொழில் பயிற்சியை நிறைவு செய்துள்ள பயிலுனர்களுக்கு கருவித் தொகுதிகளை பெற்றுக் கொடுத்தல் | 6.09 |
| 06 | நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையத்திற்கு சேவையாற்றல் | 0.25 |
| 07 | பாலர் பாடசாலை ஆசிரியர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் - 500 ஆசிரியர்கள் | 1.0 |
| 08 | பொசொன் பக்திப் பாடல் நிகழ்ச்சி | 0.46 |
| 09 | திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையத்திற்கு சிறுவர்களை தெரிவு செய்வதற்கான ஆரம்பப் பரீட்சை | 2.78 |
| 10 | திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல்களைத் தயார் செய்தல் | |
| | **செலவினங்களின் கூட்டுத்தொகை** | **49.21** |
| | **ஒதுக்கிய ஏற்பாடு** | **50.00** |

**வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்**
**செலவுத் தலைப்பு 216-02-03-13 – 1501 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| தொடர் இல. | செயற்பாடு மற்றும் பௌதீக முன்னேற்றம் | ஏற்பாடு ரூபா | செலவினம் ரூபா |
|---|---|---|---|
| 01. | திணைக்களத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் பிள்ளைகளுக்கான பயிலுனர் கொடுப்பனவுகளைச் செலுத்தல் (ஒரு பிள்ளைக்கு ரூபா 150/-) – எண்ணிக்கை 496 | 30.00 | 27.02 |
| 02. | திணைக்களத்தின் நிதி அனுசரணை பெறுகின்ற தொண்டர் நிறுவனங்களின் சேவை பெறுநர்கள் 298 பேருக்கு பயிலுனர் கொடுப்பனவு செலுத்தல் | | |

**வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டம் - நிதிசார் முன்னேற்றம்**
**செலவுத் தலைப்பு 216-02-03 – 1203 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| தொடர் இல. | செயற்பாடு | ஏற்பாடு ரூபா | செலவினம் ரூபா |
|---|---|---|---|
| 01 | தொழில் பயிற்சி நிறுவனங்களின் உணவுக்கான கொடுப்பனவுகளை செலுத்தல் மற்றும் இல்லப் பொறுப்பாளர், உபசரணை அலுவலர்களுக்கு சீருடைக் கொடுப்பனவு செலுத்தல் | 133.5 | 99.52 |

**வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்**
**செலவுத் தலைப்பு 216-02-04 – 1203 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| தொடர் இல. | செயற்பாடு | ஏற்பாடு ரூபா | செலவினம் ரூபா |
|---|---|---|---|
| 01 | ரிதியகம தடுத்துவைத்தல் இல்லத்தின் உணவுக்கான கொடுப்பனவு | 93.74 | 70.98 |

## 2.1.8 வலது குறைந்த பிள்ளைகளின் விளையாட்டு, கலாசார மற்றும் கலைத் திறன் அபிவிருத்திக் கருத்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களம் வலது குறைந்த சிறுவர்களின் தொழில்சார் ஆற்றல்களை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதுடன், அவர்களின் அழகியற்கலைசார் மற்றும் விளையாட்டு திறமைகளை மெருகூட்டி ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான ஆட்களாக சமூகமயப்படுத்துவதற்கும் முக்கியமாக நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

அதற்கமைய, 2025 ஆம் ஆண்டில் நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக 62 போட்டிகளின் கீழ் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் தேர்ச்சி மட்டத்தை அடைந்திருந்த வலதுகுறைந்த இளைஞர் யுவதிகள் 348 பேர் தேசிய போட்டியில் ஈடுபடுத்தப்பட்டார்கள். 2025 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி தியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட்ட தேசிய விளையாட்டுப் போட்டியில் சிறந்த தேர்ச்சி மட்டத்தை அடைந்திருந்த வலது குறைந்த விளையாட்டு வீர, வீராங்கனைகள் 72 பேர் பெராஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளார்கள்.

- **வலது குறைந்ததோரின் தேசிய கலாசார வைபவம் ‘சித் ரூ’**

வலது குறைந்தவர்களின் அழகியற்கலை திறமைகளை இனங்கண்டு அவர்களின் அழகியற்கலை ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதற்கான மேடையை உருவாக்கிக் கொடுப்பதும், பெறுமதிசேர்த்து பாராட்டுவதற்காக மாகாண மட்டத்தில் போட்டிகளில் பங்கேற்ற வலதுகுறைந்த இளைஞர், யுவதிகள் 640 பேரின் பங்கேற்புடன் நடாத்தப்பட்ட நடன நிகழ்ச்சிகளிலிருந்து வெற்றியீட்டிய நடனக் குழுக்களிலிருந்து தேசிய மட்டத்திலான போட்டிக்கு இளைஞர் யுவதிகள் 384 பேர் பங்கேற்றார்கள். இப்போட்டியின் இறுதியில் பரிசுகள், கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு 2025 ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி தாமரைத் தடாகம் அரங்கில் கௌரவ சனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

## 2.1.9. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (சீ.பி.ஆர்.)

சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலதுகுறைந்த ஆட்களுக்குத் தேவையான செவைகளை மேம்படுத்தல், சமமான வாய்ப்புக்களை ஏற்படுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்து வலதுகுறைந்த ஆட்களை உடல், உள மற்றும் சமூக ரீதியாக கட்டியெழுப்புவது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், குறித்த சமுதாயத்தினரின் குடும்ப உறுப்பினர்களின் பொருளாதார மற்றும் சமூக நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்யும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்**

**செலவுத் தலைப்பு 216 -02 -03 -5 – 2509 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| கருத் திட்ட ம் | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | ஏற்பாடு ரூ.மி. | செலவினம் ரூ.மி. |
|---|---|---|---|---|
| 01 | திறிய நிபயும் - 2025 வலதுகுறைந்த ஆட்களின் தேசிய வர்த்தக மற்றும் தொழில் திறன் கண்காட்சி | (தித்வா சூறாவளி காரணமாக திட்டமிடப்பட்டவாறு அமுல்படுத்த முடியவில்லை) திணைக்கள மட்டத்தில் திறிய சந்தை நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. | 7,872,720.00 | 1,948,354.50 |
| 02 | வலது குறைந்த சமுதாயத்தினருக்கு உபகரணம் மற்றும் சேவைகளை (நேரடி உதவி) வழங்குதல்<br>* கொமட் மலசலகூடம்<br>* மின்சாரம் வழங்குதல்<br>* வாயு மெத்தை<br>* நீர் மெத்தை<br>* நீர் வசதி<br>* வேறு | 30<br>08<br>03<br>03<br>02<br>06<br>08 | 750,000.00 | 736 ,529.00 |
| 03 | தேசிய மட்டத்திலான முன்னேற்ற மீளாய்வு/கலந்துரையாடல் தலைமை அலுவலகம், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னேற்ற மீளாய்வு மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் | பிரதேச /மாவட்ட /தேசிய<br>1370 | 3,250,000.00 | 2,989,361.00 |
| 04 | வைத்தியசாலை நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள், அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 03 | 100,000.00 | 38,295.00 |
| 05 | தொழில்முயற்சிசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 68 | 1,000,000.00 | 883480.00 |
| 06 | நிருவாக செலவினங்கள் | சீ.பி.ஆர். பிரிவின் தொலைபேசி பட்டியல், எழுதுகருவி, எரிபொருள் மற்றும் ஏனைய பொதுச் செலவினங்கள் | 400,000.00 | 400,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் | 36 நிகழ்ச்சித்திட்டங்கள்<br>49 பேர் | 5,000,000.00 | 4,879,376.00 |
| | | | **18,372,720.00** | **11,875,395.50** |

## 2.1.10 கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம்

கற்புலனற்ற நிலைமைக்கு ஆளாகும் ஆட்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணம் வழங்குவதை நோக்காகக் கொண்டு, நாடு முழுவதிலும் பரந்து வாழும் கற்புலனற்ற சமுதாயத்தினர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன் கருதி பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதன் மூலம் அடையப்பெற்ற பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

**கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம் - நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்**
**செலவுத் தலைப்பு 216-02-03-3-1508 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| தொடர் இல. | நிகழ்ச்சித்திட்டம் | பௌதீக முன்னேற்றம் | ஏற்பாடு ரூ.மி. | செலவினம் ரூ.மி. |
|---|---|---|---|---|
| 01 | கல்வி மற்றும் கலாசார உதவி | | 10,342,414.00 | 8,839,972.00 |
| | i. கற்புலனற்ற பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு மாணவர் உதவிகளை வழங்குதல்<br>ii. கற்புலனற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு கையடக்கத் தொலைபேசியைப் பெற்றுக் கொடுத்தல்<br>iii. கற்புலனற்ற பாடசாலை மாணவர்களுக்கு பிரேல் ரைடர் வழங்குதல் | மாணவர்கள் 303 பேர்<br>18<br>3 | | |
| 02 | தொழில் பயிற்சி | பயிலுனர்கள் 3 | 130,000.00 | 78,000.00 |
| 03 | புனர்வாழ்வளிப்பு உதவி | | 1,871,000.00 | 1,870,621.00 |
| | i. போதனாசிரியர் கொடுப்பனவு | போதனாசிரியர்கள் 5 | | |
| | ii. பயிலுனர்களுக்கு புலமைப் பிரிசில் கொடுப்பனவு | பயிலுனர்கள் 19 | | |
| | iii. மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்குதல் | பயனாளிகள் 01 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | iv. பேச்சுப் புத்தகம் | அச்சுப் பக்கம் 32,000 இற்குரிய நூல் | | |
| 04 | கண் வில்லை மற்றும் கண் சிகிச்சை | 03 கண் வில்லை | 400,000.00 | 102,847.00 |
| 05 | வெண்பிரம்பு தினக் கொண்டாட்டம் தேசிய வைபவம் | 01 வைபவம் | 3,266,586.00 | 3,266,586.00 |
| 06 | சுய தொழில் உதவி | ஆட்கள் 13 பேர் | 440,000.00 | 440,000.00 |
| 07 | விளையாட்டு உதவி | 08 பாடசாலைகள் | 700,000.00 | 499,000.00 |
| 08 | கற்புலனற்றோர் அமைப்புக்களின் கோரிக்கைகள் | | 200,000.00 | 47,381.25 |
| 09 | நிருவாக மற்றும் ஏனைய செலவினங்கள் | | 1,367,000.00 | 1,288,472.29 |
| 10 | கணக்காய்வுக் கட்டணம் | | 175,000.00 | 168,504.00 |
| 11 | நிதிச் செலவினங்கள் | | 3,000.00 | - |
| 12 | நானாவித செலவினங்கள் | | 105,000.00 | 71,751.13 |
| **மொத்தம்** | | | **19,000,000.00** | **16,673,134.01** |

**2.1.11 நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றங்களினால் குற்றவாளியாக்கப்படும் ஆட்களுக்கு அரவணைப்பு வழங்குதல் மற்றும் ஆட்களை சமூகமயப்படுத்தல்.**

நாடோடிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய குற்றவாளிகளாக்கப்படும் ஆட்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பிவைக்கப்படுகின்ற ஒரே நிறுவனமாக இருப்பது ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ரிதியகம கலன தற்காலிக தடுத்துவைத்தல் இல்லமாகும். தற்போது ரிதியகம கலன தற்காலிக தடுத்துவைத்தல் இல்லத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சேவை பெறுநர்களான 516 பேருக்கு சேவையாற்றப்படுகின்றது.

சேவை பெறுநர்களின் நலன்புரிக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.

- தங்கியுள்ளவர்களுக்கான புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு. (கமத்தொழில், உணவுத் தொழில்நுட்பம், மலர் பயிரிடல் மற்றும் சமையலறை நடவடிக்கைகள்)
- தையல் பயிற்சிப் பாடநெறி மற்றும் தும்புத்தடி, துடுப்புக்கட்டை உற்பத்திக்கான பயிற்சி வழங்கல்.
- மாதாந்தம் வதிவிட ஆட்களின் மட்டத்தில் பாடல் ரசணை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- சர்வமத நிகழ்ச்சித்திட்டங்கள், சிங்கள புத்தாண்டு விழா, வெசாக், பொசொன், நத்தார் வைபவங்களை ஒழுங்கு செய்தல்.

- சுகாதார சாய்சாலைகளை ஏற்பாடு செய்தல்.
- ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் சமய நிகழ்ச்சிகளை நடாத்தல்.
- திறந்த பாடசாலை அலகு கலன மித்துரு – எழுதுவோம் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்.
- வதிவிட ஆட்களை சமூகமயப்படுத்துவது தொடர்பாக தையல் பாடநெறியை ஆரம்பித்தல்.

இதற்கு மேலதிகமாக சேவை பெறுநர்களை மேலும் சமூகமயப்படுத்துவதற்காக தயார் செய்யப்பட்ட உபசரணை திட்டங்களின் எண்ணிக்கை 40 ஆகும். இவற்றில் சமூகமயப்படுத்தலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சேவை பெறுநர்களின் எண்ணிக்கை 26 ஆவார்கள் என்பதுடன், 2025 ஆம் ஆண்டின் இறுதியில் சமூகமயப்படுத்தப்பட்ட சேவைபெறுநர்களின் எண்ணிக்கை 13 பேர் ஆவார்கள்.

## 2.2 போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் கருத்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற புவக்பிட்டிய ஜயவிரு சமாதி நிறுவனத்தினால் போதைக்கு அடிமையானர்களை நிறுவனமயப்படுத்தி புனர்வாழ்வளிக்கும் செயன்முறைக்கு வழிநடாத்தி உண்மையான வாழ்க்கைசார் நோக்கு மற்றும் வாழ்வின் உண்மையான மகிழ்ச்சியை புரிந்துகொள்வதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டமாகும்.

பிரதானமாக இந்த நிறுவனம் உளவியல் மருத்துவ, உளவியல் ஆலோசனை முறையியல்கள் மற்றும் மருத்துவ விஞ்ஞான பிரவேசத்தின் ஊடாக புனர்வாழ்வளிப்புச் செயன்முறைக்கு வழிப்படுத்தி வருகின்றது. 06 மாதகால புனர்வாழ்வளிப்புக் காலத்திற்குள் சேவை பெறுநர்களின் ஆன்மீக அபிவிருத்திக்கு யோகாப்பியாசம் மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது மேற்கொள்ளப்படுகின்றது. சேவை பெறுநர்கள் புனர்வாழ்வு பெறும் காலப்பகுதிக்குள் தங்குமிட வசதிகள், உணவு, குடிபானம் மற்றும் மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும். சேவை பெறுநர்களின் வாழ்வாதார வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்சார் திறன்களை அபிவிருத்தி செய்யும் பயிற்சியும் வதிவிடக் காலப்பகுதிக்குள் பெற்றுக் கொடுக்கப்படும்.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சேவை பெறுநர்கள் 36 பேருக்கு புனர்வாழ்வளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டதுடன், ஆண்டினுள் மொத்தமாக சேவை பெறுநர்கள் 114 பேருக்கு நிறுவனத்தில் புனர்வாழ்வளிப்புச் சேவைகள் வழங்கப்பட்டன. இவர்களில் 98 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டார்கள்.

இதற்கு மேலதிகமாக, நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் ''மத் எப்பா கமபுரா'' எனும் சமுதாய போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் இதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

**போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்**

**செலவுத் தலைப்பு 216- 02-03-2-1501 (2025/12/31 ஆம் திகதிக்கு)**

| செயற்பாடு | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூபா | நிதிசார் முன்னேற்றம் ரூபா | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| சமுதாய போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் (மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில்) | 1.5 | 1.20 | மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மற்றும் புவக்பிட்டிய போதை புனர்வாழ்வளிப்பு நிறுவனம் உட்பட பாடசாலை மாணவர்கள், சமுதாயத்தினர் மற்றும் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் 32 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை |

## 2.3 வலது குறைந்த சமுதாயத்தினருக்கு தொழில்வாய்ப்பு உதவி மேம்பாட்டுக்கான கருத்திட்டம் Employment Support For Persons with Disabilities (ESPD)

இக்கருத்திட்டம் சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) ஆகியன ஒன்றிணைந்து வலது குறைந்த சமுதாயத்தினருக்கு தொழில்வாய்ப்பு உதவி மேம்பாட்டுக்காக தனியார் துறையினரின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக **Employment Support for Persons with Disabilities – ESPD** என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமாகும்.

சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் மனிதவளம் மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களத்துடன் இணக்கப்பாட்டு உடன்படிக்கை மூலம் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற சமூக சேவைகள் அலுவலர்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி அலுவலர்கள் ஊடாக தொடர்புகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் (**Linkage Creation Program - LCP**) 2025 ஆண்டு தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவது 338 மேற்கொள்ளப்பட்டது.

**ESPD** கருத்திட்டத்தின் 2 ஆம் கட்டமாக 2025 ஆம் ஆண்டு தொழில்வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ள வலது குறைந்த ஆட்கள் மற்றும் தற்போது தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் இனங்காணப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன் தரப்பினர்களின் கூட்டங்கள் (**Stakeholder Meeting – SHM)** 07 நடாத்தப்பட்டமை.

1. தொடர்புகளை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை (**Linkage Creation Program**) மென்மேலும் வெற்றிகரமாக்கிக் கொள்வதை நோக்காகக் கொண்டு மாவட்ட செயலக மட்டத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி அலுவலர்களை ஒன்றிணைத்து கூட்டான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 03 ஐ**Joint Progress Meeting)** நடாத்துதல்.
2. கூட்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் (**Joint Progress Meeting - JPM**) 25 ஐ நடாத்தல்.
3. சமூக சேவைகள் திணைக்களத்தினுள் தொழில் மேம்படுத்தல் அலகை (**Employment Support Unit)** தாபித்தல்.
4. மாகாண மட்டத்தில் விருது வழங்கும் 07 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியதன் மூலம் அலுவலர்கள், நிறுவனங்கள் மற்றும் வலது குறைந்தவர்களான தொழில் செய்வோரை பாராட்டுதல்.
5. தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வலது குறைந்த ஆட்களை தொழில் வாய்ப்புக்களில் தொடர்ந்தும் வைத்திருப்பதை நோக்காகக் கொண்டு ‘கனவு இலங்கை’ என்ற நிகழ்ச்சித்திட்டம் 88 பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டமை. இதன் போது தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நாளாந்தம் தொழில்சார் சூழலுக்கு புறம்பாக அவர்களின் இணைக் குழுக்களுடன் மகிழ்ச்சிகரமாக நேரத்தை செலவிடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.4 சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் தேசிய ஆராய்ச்சிக் குழுவைத் தாபித்தல்

தற்போது காணப்படுகின்ற சமூகப் பிரச்சினைகள் சிக்கலானதாக உள்ளதனால், மேற்படி சிக்கல்களை இனங்காண்பதற்கும் மற்றும் இனங்காணப்பட்ட சிக்கல்களுக்கான தீர்வுகளை விஞ்ஞான ரீதியான முறையியல்களின் ஊடாக பகுப்பாய்வு செய்து முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் ஒரு நாட்டின் கொள்கைகளை வகுப்பத்தில் அவசியமான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஆராய்ச்சிக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2025 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ள இந்த ஆராய்ச்சிக் குழுவுக்கு 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக அலுவலர்கள் 25 பேர் கொண்ட குழுவைத் தெரிவு செய்துகொள்ளல். தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு இரண்டு (02) நாள் வதிவிடப் பயிற்சியை வழங்குதல். சமூக சிக்கல்களை விபரித்து 2 ஆராய்ச்சித் தலைப்புக்களின் கீழ் கேள்விக் கொத்தை வடிவமைப்பதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2.5 மாவட்ட மட்டத்தில் திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களைத் தாபித்தல்

“ஒன்றாக இணைந்து கைவிடாது” எனும் எண்ணக்கருவின் கீழ் வலதுகுறைந்த ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களை இடையீடு செய்யப்பட்ட சமூகமொன்றில் பெருமையுடன் வாழ்வதற்கு பலப்படுத்துவதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்குமாக திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பிக்கும் செயற்பணி சமூக சேவைகள் திணைக்களத்திடம் பொறுப்பளிக்கப்பட்டது.

வயது 06 முதல் 18 வயதுக்குக் குறைவான வலதுகுறைந்த சிறுவர்களுக்கு பகல்நேரத்தில் திறன் விருத்தியுடன் அரவணைப்பை நல்லமுறையில் உறுதி செய்கின்ற அரச பொறிமுறையின் அவசியத்தன்மை நாட்டில் காணப்படுவதனால் அதற்கு மிக உகந்த தீர்வாக பெற்றோர், பாதுகாவலர் உள்ள, ஓரளவுக்கு சுயமாக செயற்படும் ஆற்றலைக் கொண்டுள்ள (கட்டிலில் இருக்கின்றவர்கள் அல்லாத மற்றும் கடும் உளவியல் குறைபாடுகள் இல்லாத) வலதுகுறைந்த சிறுவர்களுக்கு காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையான பகல் நேர அரவணைப்பு நிலையங்களை சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2025 ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சுக்கு ஓடிசம் உள்ள வலதுகுறைந்த சிறுவர்களுக்கான பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூ.மி. 250.00 ஆன ஏற்பாடுகள் மூலம் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இனங்காணப்பட்டுள்ள எட்டு (08) மாவட்டங்களில் (குருநாகல், அநுராதபுரம், காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, களுத்துறை, திருகோணமலை மற்றும் கேகாலை) திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 2.6 வெற்றிகள்

- வலது குறைந்த இளைஞர் யுவதிகளின் திறமைகள் மற்றும் பலவீனங்களை இனங்கண்டு பயிலுனர்கள் 352 பேர் தனிநபர் அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய அபிவிருத்தி செய்யப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்டமை.
- தொழில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள பயிலுனர்களுக்கு சுயதொழில்வாய்ப்புக்களை ஆரம்பிக்கத் தேவையான வியாபாரத் திட்டங்களை தயார் செய்து 84 கருவித் தொகுதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமை.
- வலது குறைந்த ஆட்கள் 66 பேருக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தமை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தமை.
- தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள ஆட்களை தொழிலிலேயே தடுத்துவைத்திருப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமாக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் “சிஹின ஸ்ரீலங்கா” என்ற பெயரில் நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்தமை. 2025 ஆம் ஆண்டில் 88 பிரதேச செயலாளர் பிரிவுகள் இது அமுல்படுத்தப்பட்டமை.
- தொழில் மேம்பாட்டு அலகு தேசிய மட்டத்தில் தாபித்தல்.
- வலது குறைந்த ஆட்கள் 338 பேரை தனியார் துறையில் தொழில்வாய்ப்புக்களில் ஈடபடுத்த முடிந்தமை.
- தொழில் மேம்பாட்டு அலகு (ESU) தொடர்பாக மாவட்ட மட்டத்திலான செயற்றிட்டத்தை தயார் செய்தல்.
- ரிதியகம தடுத்துவைத்தல் இல்லத்தில் சேவை பெறுவோரை சமூகமயப்படுத்துவதை நோக்காகக் கொண்டு உபசரணை திட்டங்களை தயார் செய்வதற்காக பதவியணியினரை பயிற்றுவித்தமை மற்றும் சம்பவக் கற்கைகளை மேற்கொண்டு உபசரணை திட்டங்கள் 4 தயார் செய்யப்பட்டமை.

## 2.7 சவால்கள்

- வெற்றிகரமாக தொழில் பயிற்சியை நிறைவு செய்துள்ள பயிலுனர்களை முனைப்புடன் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையில் நிலைபேறான முறையில் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல் மற்றும் தொழில்வாய்ப்புக்களில் நீண்டகாலம் தடுத்துவைத்திருப்பது கடினமாக உள்ளமை.
- இலங்கையில் வலது குறைந்தவர்களக்கு கல்வி, தொழில்வாய்ப்பு ஆகிய துறைகளில் வலது குறைந்த ஆட்களுக்கு இடையீட்டு வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பது நடைமுறையில் கடினமாக உள்ளமை.
- நீண்டகால அரவணைப்பு அரசியமான வலது குறைந்த ஆட்களுக்கு (வலது குறைந்த சிறுவர்கள், வலது குறைந்த பெண்கள், வலது குறைந்த முதியோர்) பாதுகாப்பு, அரவணைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்குப் போதியளவு வளங்கள் மற்றும் வசதிகளை இல்லாமை.

- வைத்தியசாலை நலன்புரிச் சேவைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- நிறுவனங்களை முறையாகப் பேணிவரத் தேவையான சிறந்த பதவியணியினர், அரச கொள்கைகளுக்கு அமைவான மட்டுப்படுத்தல்களின் காரணமாக ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள முடியாதுள்ளமை.
- வலதுகுறைந்த சமுதாயத்தினரை வலுவூட்டி இடையீட்டுக்கான தொழில் சந்தை வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமை.
- சேவை நிலையங்களில் நியாயமான இடவசதி எண்ணக்கருவை அமுல்படுத்துவது தொடர்பாக சேவை வழங்குனர்களின் அறிவு குறைவாக உள்ளமை.

## 2.8 இலக்கு

- தொழில் பயிற்சியை நிறைவு செய்ய அண்மித்துள்ள பயிலுனர்களுக்கு அரச அல்லது தனியார் துறையுடன் இணைந்து சேவைசார் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அரச, தனியார் துறையினருடன் இணைந்து சேவைசார் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்துடன் இணைந்து வலதுகுறைந்த இளைஞர், யுவதிகளுக்கு ஆடைத்துறையில் தொழில்வாய்ப்பை அதிகரித்தல்.
- தொழில் மேம்பாட்டு அலகுகள் மூலம் முழு நாட்டையும் உள்ளடக்கியதாக **(ESU)** வலது குறைந்த சமுதாயத்தினருக்கு கூடுதல் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- தடுப்பு நிலையங்களில் உள்ள ஆட்களிலிருந்து உபசரணை திட்டங்களுக்கு அமைய தெரிவு செய்யப்பட்ட ஆட்களை சமூகமயப்படுத்தல்.
- 25 மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக திறன் அபிவிருத்தி பகல்நேர அரவணைப்பு நிலையங்களை ஆரம்பித்தல்.
- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சிக் குழுவின் ஊடாக வெற்றிகரமாக 2 சமூகச் சிக்கல்களை இனங்கண்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.
- அலுவலர்களுக்கும், தனியார் துறையில் ஈடுபட்டள்ள ஊழியர்களுக்கும் சமிஞ்சை மொழிப் பயிற்சி மூலம் சமிஞ்சை மொழியை பிரபல்யப்படுத்தல்.
- தேசிய மட்டத்திலான வைபவங்களின் ஊடாக வலது குறைந்த ஆட்களை சமூக ரீதியாக பலப்படுத்தல் மற்றும் தேசிய, சர்வதேச மட்டத்தில் பாராட்டுதல்.

..................................

**பிரதம கணக்கீட்டு அலுவலர்**
**பெயர் :- டபிள்யு.ஜி. தர்சனீ கருணாரத்ன**
**பதவி :- சமூக சேவைகள் பணிப்பாளர்**
**திகதி :- 2025….**

# அத்தியாயம் 03

# ஆண்டின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 2025 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதிச் செயலாற்றுகைப் பற்றிய கூற்று

**2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

**ஏசீஏ-எவ்**

**ரூ**

| வரவு செலவுத்திட்டம் | | குறிப்பு | உண்மை | | |
|---|---|---|---|---|---|
| | | | 2025 | 2024 | |
| | **வருமானப் பெறுகைகள்** | | - | - | ஏசிஏ-1 |
| | வருமான வரி | 1 | - | - | |
| | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | | | |
| | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | | | ஏசிஏ 3 |
| | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | ஏசிஏ - |
| | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 810,790,000 | 653,773,000 | ஏசிஏ - 5/5(ஆ) |
| | வைப்புகள் | | 6,628,882 | 5,991,329 | |
| | முற்பணக் கணக்குகள் | | 27,959,935 | 27,134,336 | |
| | ஏனைய பிரதான பேரேட்டுக் கணக்குப் பெறுகைகள் | | - | - | |
| | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **845,378,817** | **686,898,666** | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **845,378,817** | **686,898,666** |
| | **திறைசேரி அனுப்புதொகை** | | **333,566** | **-** |
| | **தேறிய வருமானம் பெறுகை மற்றும் வருமானம் அல்லாத பெறுஜக** | | **845,045,251** | **686,898,666** |
| | **கழி : செலவினம்** | | - | - |
| | **மீண்டுவரும் செலவினம்** | | - | - |
| **943,800,000**<br><br>**472,314,000** | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 933,457,990 | 776,651,355 |
| | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 368,957,151 | 346,535,877 |
| **156,300,000** | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 135,247,336 | 95,480,573 |
| **-** | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - |
| **50,000** | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | 311,250 |
| **1,572,464,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **1,437,662,478** | **1,218,979,055** |
| | **மூலதன செலவினம்** | | - | - |
| **63,581,000** | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 35,456,107 | 26,459,473 |
| **77,805,000** | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 76,520,425 | 51,400,288 |
| **24,214,198** | மூலதன மாற்றல்கள் | 12 | 14,195,431 | - |
| **-** | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - |
| **3,650,000** | திறன் விருத்தி | 14 | 2,024,261 | 1,246,660 |
| **-** | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | - | 10,268,208 |
| **169,250,198** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **128,196,225** | **89,374,628** |
| | **பிரதான பேரேட்டு செலவினம் (ஏ)** | | | |

ஏசிஏ -2(ii)

எசிஎ - 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 7,426,328 | 4,269,359 | |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 32,467,295 | 25,889,841 | எசி-5 |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஈ+உ+ஊ)** | | - | - | |
| | **மொத்த செலவினம்** | | **39,893,623** | **30,159,200** | |
| **1,741,714,198** | **மொத்த செலவினம் ஒ = (ஊ+எ+ஏ)** | | **1,605,752,325** | **1,338,512,884** | |
| - | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி ஓ = (உ-ஒ)** | | **(760,707,074)** | **(651,614,218)** | |
| | **கட்டுநிதி இணக்கக்கூற்றுக்கு அமைய மீதி** | | **(760,707,074)** | **(651,614,218)** | |
| | **டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி மீதி** | | – | – | |
| | | | **(760,707,074)** | **(651,614,218)** | ஏசிஏ -7 |

## 3.2 நிதி நிலைமைக் கூற்று

**ACA-P**

**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை | |
|---|---|---|---|
| | | 2025 ரூபா | 2024 ரூபா |
| நிதி அல்லாத சொத்துக்கள் | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,237,387,725 | 1,155,306,458 |
| நிதி சொத்துக்கள் | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5 | 62,856,176 | 58,348,816 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | | - |
| மொத்த சொத்துக்கள் | | **1,300,243,901** | **1,213,655,275** |
| தேறிய சொத்துக்கள் / உரியாண்மை | | | |
| தேறிய சொத்துக்கள் | | 61,593,777 | 56,288,971 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,237,387,725 | 1,155,306,458 |
| வாடகை மற்றும் வேலை முற்பண ஒதுக்கம் | ஏசீஏ 5(பி) | - | - |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,262,399 | 2,059,845 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,300,243,901** | **1,213,655,275** |

பக்க இலக்கம் 46 முதல் 49 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 50 முதல் 53 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ................................... | ................................... | ................................... |
| பிரதம கணக்கீட்டு அலுவலர் | கணக்கீட்டு அலுவலர் | பெயர் : பி.கே.ஜி.ரீ.என்.எம். குலரத்ன |
| பெயர்: சம்பத் மந்திரிநாயக்க | பெயர்: டபிள்யு.ஜி. தர்ஷனீ கருணாரத்ன | பதவி : பிரதம கணக்காளர் |
| பதவி : செயலாளர் | திகதி : 2025…… | திகதி : 2025….. |
| திகதி : 2025…….. | | |

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

*ஏசீஏ- சீ*

**2025 டிசம்பர் 31 இல் நிறைவடைந்த ஆண்டுக்கான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | 2025<br>ரூபா | 2024<br>ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 25,378,485 | 18,730,438 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 810,790,000 | 653,773,000 |
| முற்பணங்களை அறவிடல் | 28,063,469 | 26,413,396 |
| வைப்புக்களின் பெறுகை | 6,628,882 | 5,991,329 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **870,860,835** | **704,908,164** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 664,988,465 | 535,468,788 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 105,270,651 | 73,296,295 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 3,808,549 | 29,119,767 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 333,566 | - |
| முற்பணக் கொடுப்பனவு | 32,245,539 | 25,898,773 |
| வைப்புக் கொடுப்பனவு | 7,426,328 | 4,269,359 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **814,073,098** | **668,052,983** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **56,787,737** | **36,855,181** |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| வட்டி | - | - |

| | | |
|---|---|---|
| பங்கிலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | - | - |
| மூலதனச் செலவினம் | **56,787,737** | **36,855,181** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **56,787,737** | **36,855,181** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(56,787,737)** | **(36,855,181)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| வைப்புக்கள் பெறுகை | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| ***கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:*** | - | - |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | - | - |
| ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப காசு மீதி | - | - |
| டிசம்பர் 31ஆம் திகதியில் இறுதிக் காசு மீதி | - | - |

**3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் – ஏற்புடையதன்று**

**3.5 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை – ஏற்புடையதன்று**

**3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை**

ரூபா ,000

| ஏற்பாடுகளின் வகை | ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | | உண்மை செலவினம் | பயன்படுத்திக் கொள்ளப்பட்ட ஏற்பாடுகள், நிறைவு செய்யப்பட்ட இறுதி ஏற்பாடுகளின் % ஆக |
|---|---|---|---|---|
| | நிதி ஏற்பாடு | இறுதி ஏற்பாடு | | |
| மீண்டெழுவன | 1,545,700,000 | 1,572,464,000 | 1,437,662,478 | 91.43 |
| மூலதன | 124,300,000 | 169,250,198 | 128,196,225 | 75.74 |

**3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் / மாவட்டச் செயலகம்/ மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு – ஏற்புடையதன்று**

**3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை**

ரூ. ,000

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2025.12.31 ஆம் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கு அமைய மீதி | 2025.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்றுக்கு அமைய மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்படுத்தப் பட உள்ளது | முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடமும், கட்டமைப்புக்களும் | 874,494,020 | | | |
| 9152 | இயந்திரசாதனம் | 283,773,904 | | | |
| 9153 | காணி | 79,100,000 | | | |
| 9154 | அருவைச் சொத்துக்கள் | 19,800 | | | |
| 9155 | உயிரியல்சார் சொத்துக்கள் | - | - | | |
| 9160 | மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள் | - | - | | |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | | |

## 3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } එල්එස්ඩබ්/ඩී/එස්එස්ඩී/එෆ්එස් /2025 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2026 ජූනි 23 දින

**கணக்கீட்டு அலுவலர்,**

சமூக சேவைகள் திணைக்களம்.

**தலைப்பு : 216 சமூக சேவைகள் திணைக்களத்தின் 2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை**

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 216 – சமூக சேவைகள் திணைக்களத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவுக்கு அமைய தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவுக்கு அமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமை, நிதிசார் செயலாற்றல், காசுப்பாய்ச்சல் மற்றும் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது அடிப்படையாக அமைந்துள்ள விடயங்களுக்கு இணங்க சகல போதியளவிலான தன்மைகள் தொடர்பில் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஒரு விடயத்தை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதன் அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதன் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான குறிப்பு 1 தொடர்பாக கவனத்தைக் கோருகின்றேன். இந்த நிதிக் கூற்றுக்கள் நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்கள் இலக்கம் 02/2025 இற்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் அவசியத்தன்மைக்காக தயார் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு உகந்ததாக இருக்காதிருக்க முடியும். எனது அறிக்கை திணைக்களம், திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் உபயோகத்தை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயம் விளக்கப்படுவதில்லை.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு அலுவலரினதும், கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்

அரச நிதி ஒழுங்குவிதிகள் 150 மற்றும் 151 மற்றும் 2025 டிசம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டல்கள் இலக்கம் 02/2025 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உட்பிரிவுக்கு அமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை தயார் செய்து பேணிவருவதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது

விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 1.6.1 முற்பணம் செலுத்தல்

(அ) 2025 சனவரி 01 ஆம் திகதிக்கு தீர்க்கப்படாதுள்ள ஓய்வுறுத்தப்பட்ட அலுவலர்கள் 03 பேரின் கடன் நிலுவை ரூபா 284,727 ஐ அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பண பீ கணக்கில் பதவி வெறிதாக்கிய அலுவலர்களிடம் அறவிட வேண்டிய கடன் நிலுவை பற்றிய காலப்பகுப்பாய்வுக்கு அமைய 14 வருடங்களுக்கு முன்னர் பதவி வெறிதாக்கியுள்ள அலுவலர் ஒருவரிடம் அறவிட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூபா 103,420 ஐ அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் 11 பேரிடம் அறவிட வேண்டியுள்ள ரூபா 77,500 ஆன அனர்த்தக் கடன் முற்பணங்களில் தீர்க்கப்படாத நிலுவை 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2. வேறு சட்டரீதியான தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவுக்கு அமைய பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன என்பது.

(ஆ) கடந்த ஆண்டு தொடர்பிலான நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டுக்குரிய அறிக்கையின் பந்தியின் தொடர்பு** | **அமுல்படுத்தப்படாதிருந்த சிபாரிசு** | **இந்த அறிக்கையின் கணக்காய்வுப் பந்தியின் தொடர்பு** |
|---|---|---|
| 1.6.2 (ஆ) | சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான 5 தொழில் பயிற்சி நிறுவனங்கள், 2 சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் மற்றும் 2 தடுத்துவைக்கும் நிலையங்கள் அமைந்துள்ள 73.376 ஹெக்டயர் மற்றும் 10.3804 அளவைக் கொண்ட 05 காணித் துண்டுகள் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டு நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1.6.2 (ஆ) |
| 3.2 (அ) | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் xx இன் 5.2 பந்திக்கமைய 2019.01.21 ஆம் திகதி முதல் 2024 சனவரி 20 வரை சம்பளமற்ற வெளிநாட்டு லீவு பெற்றுள்ள அலுவலர் ஒருவர் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை மீண்டும் சேவைக்கு சமூகமளித்திருக்கவில்லை. அதற்கமைய கணிப்பிடப்பட்ட ரூபா 667,920 ஆன தண்டப்பணத்தை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 3.2 (அ) |
| 3.3 (ஆ) | நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) மற்றும் 371 (5) பந்திகளுக்கமைய பணி குறித்த இடைக்கால கட்டுநிதியைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர் குறித்த பணி நிறைவடைந்தவுடன் தீர்த்தல் வேண்டுமாயினும், தொழில் பயிற்சி | 3.3 |

| | | |
|---|---|---|
| | நிறுவனங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் முற்பணம் பெற்றுள்ள அலுவலர்கள் ஆண்டினுள் பெற்றுக் கொண்டிருந்த முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,094,063 ஆனது 65 சந்தர்ப்பங்களில் 16 நாட்கள் முதல் 336 நாட்கள் வரையான காலஎல்லை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்ததன. | |
| 4.2 | கொழும்பு 02, வொக்சோல் வீதி, இலக்கம் 136 இல் சமூக சேவைகள் திணைக்களத்தினால் 1992-2012 வரை போதைவஸ்துக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்கும் நிலையமொன்றாக நவோதய நிறுவனம் பேணிவரப்பட்டுள்ளதுடன், அதற்கான வீதவரியும் செலுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு இக்கட்டிடத்திலிருந்து வெளியேறியுள்ள போதும் கட்டிடத்திலிருந்து வெளியே செல்வது முறையாக அறிவிக்கப்படாமை காரணமாக 2012 ஆண்டு முதல் 2015.12.31 ஆம் திகதி வரை நிலுவை வீதவரியாக ரூபா 2,789,684 ஆன தொகை கொழும்பு மாநகரசபைக்கு செலுத்த வேண்டிய நிலை திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது. மேலும், இக்காணி மற்றும் கட்டிடத்திலிருந்து வெளியேறும் போது அது பற்றி நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனமொன்றுக்கு கையளிக்காமை காரணமாக 12 வருடங்களுக்கும் மேல் குறித்த கட்டிடம் பயனற்றதாக காணப்பட்டுள்ளது. | 4.5 |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

அபிவிருத்தி உதவிச் செலவினத் தலைப்புக்கு குறைநிரப்பு மதிப்பீடு மூலம் ரூபா 9,214,198 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் கருத்திட்டம் அமுல்படுத்தப்படாமை காரணமாக முழுத் தொகையும் எஞ்சியுள்ளது.

### 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | இணங்கியொழுகாமை |
|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் xv அத்தியாத்தின் 5.2 பந்தி | 2019.01.21 ஆம் திகதி முதல் 2024 சனவரி 20 வரை சம்பளமற்ற வெளிநாட்டு லீவு பெற்றுள்ள அலுவலர் ஒருவர் மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதி வரை மீண்டும் சேவைக்கு சமூகமளிக்கவில்லை. அதற்கமைய கணிப்பிடப்பட்ட ரூபா 667,920 ஆன தண்டப் பணத்தில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா 100,000 ஆன தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணம் 316 | சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் பயிலுனர்களின் சேமிப்புப் பாஸ் புத்தகங்கள் சேவ் ஒன்றில் பாதுகாப்பாக வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 751 | சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் இருப்புப் பதிவேடு முறையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 பணி குறித்த இடைக்கால கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(அ), நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) மற்றும் 371 (5) பந்திகளுக்கு அமைய பணி குறித்த இடைக்கால கட்டுநிதியைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர் குறித்த பணி நிறைவடைந்தவுடன் தீர்த்தல் வேண்டுமாயினும், தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தொழில் பயிற்சி நிலையங்களில் அலுவலர்கள் 52 பேர் பல்வேறு பணிகளுக்காக பெற்றுக் கொண்டுள்ள பணி குறித்த கட்டுநிதி ரூபா 399,117 ஆன தொகை பணி நிறைவடைந்து 13 முதல் 93 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டுள்ளன.

### 3.4 வைப்புக்கள்

(அ) மூன்றாம் தரப்பினருக்கு மீளச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்துவைக்கப்பட்ட வைப்புக் கணக்கில் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 1,262,399 ஆன மீதியில் பிரதேச மற்றும் மாவட்ட செலகங்களிலுள்ள அலுவலர்கள் மற்றும் ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லத்தின் அலுவலர்களிடம் அறவிடப்பட்ட இடர் கடன்

### 3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | இணங்கியொழுகாமை |
|---|---|---|
| (அ) | தாபன விதிக் கோவையின் xv அத்தியாத்தின் 5.2 பந்தி | 2019.01.21 ஆம் திகதி முதல் 2024 சனவரி 20 வரை சம்பளமற்ற வெளிநாட்டு லீவு பெற்றுள்ள அலுவலர் ஒருவர் மீளாய்வு ஆண்டின் இறுதித் திகதி வரை மீண்டும் சேவைக்கு சமூகமளிக்கவில்லை. அதற்கமைய கணிப்பிடப்பட்ட ரூபா 667,920 ஆன தண்டப் பணத்தில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா 100,000 ஆன தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப் பிரமாணம் 316 | சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெறும் பயிலுனர்களின் சேமிப்புப் பாஸ் புத்தகங்கள் சேவ் ஒன்றில் பாதுகாப்பாக வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 751 | சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் இருப்புப் பதிவேடு முறையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

### 3.3 பணி குறித்த இடைக்கால கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல்

(அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதிப் பிரமாணம் 371(அ), நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ) மற்றும் 371 (5) பந்திகளுக்கு அமைய பணி குறித்த இடைக்கால கட்டுநிதியைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர் குறித்த பணி நிறைவடைந்தவுடன் தீர்த்தல் வேண்டுமாயினும், தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்களின் தொழில் பயிற்சி நிலையங்களில் அலுவலர்கள் 52 பேர் பல்வேறு பணிகளுக்காக பெற்றுக் கொண்டுள்ள பணி குறித்த கட்டுநிதி ரூபா 399,117 ஆன தொகை பணி நிறைவடைந்து 13 முதல் 93 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டுள்ளன.

### 3.4 வைப்புக்கள்

(அ) மூன்றாம் தரப்பினருக்கு மீளச் செலுத்துவதற்காக தற்காலிகமாக தடுத்துவைக்கப்பட்ட வைப்புக் கணக்கில் 2025 டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 1,262,399 ஆன மீதியில் பிரதேச மற்றும் மாவட்ட செலகங்களிலுள்ள அலுவலர்கள் மற்றும் ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லத்தின் அலுவலர்களிடம் அறவிடப்பட்ட இடர் கடன்

தவணைப்பணம் மற்றும் வட்டித் தொகையான ரூபா 661,494 ஆன தொகையும் உள்ளதுடன், மேற்படி பெறுமதி ஆண்டின் இறுதி வரையும் முற்பண பீ கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2024 ஆம் ஆண்டுக்கு தற்காலிகமாக வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 111,294 ஆன தொகை 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

(அ) தொழில் பயிற்சிப் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள தொழில் பயிலுனர்கள் சமர்ப்பிக்கும் வியாபாரத் திட்டங்களுக்கமைய தேவையான கருவிகளை உள்ளடக்கிய 140 தொகுதிகளைப் பெற்றுக் கொடுக்கும் பணிக்காக ரூ.மி. 7 ஒதுக்கப்பட்டது. 2022/2023 ஆண்டில் பாடநெறிகளை கற்றுக் கொண்ட பயிலுனர்களுக்கு 11 தொழில் பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டு 06 பாடநெறிகள் தொடர்பாக பயிலுனர்கள் சமர்ப்பித்திருந்த உத்தேச வியாபாரத் திட்டங்கள் 84 இற்காக ரூ.மி. 6.09 ஆன உபகணரத் தொகுதிகளை வழங்கும் போது வியாபாரத் திட்டங்களின் முறையற்ற மற்றும் பூரணமற்ற மற்றும் பாடநெறிக்கு தனித்துவமான வியாபாரத்திட்டங்களை சமர்ப்பிக்காமை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பாடநெறி போதனாசிரியர்கள் வியாபாரத் திட்டங்கள் பற்றியும், மேற்படி வியாபாரத் திட்டங்களைத் தயார் செய்யும் நோக்கம் மற்றும் அவற்றைத் தயார் செய்யும் முறை பற்றி மாணவர்களை விழிப்புணர்வூட்டியிருக்கவில்லை என்பதுடன், குறித்த உபகரணங்களைப் பயன்படுத்தி சுயதொழில்வாய்ப்புக்களை மேற்கொள்வது தொடர்பாக உரிய பொறுப்புவாய்ந்த அலுவலர்கள் பின்னாய்வை மேற்கொண்டிருக்கவில்லை. வலதுகுறைந்த மாணவர்களுக்கு சமூகத்தில் ஏனையவர்களுடன் தனியாக எழுந்திருக்க தொழில் பயிற்சி மூலம் சுயதொழில்வாய்ப்புக்கான ஒத்துழைப்பு வழங்கப்பட்ட போதும் அதற்கு உகந்த உபகரணங்களை உரிய காலப்பகுதிக்குள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக மேற்படி சுயதொழில்வாய்ப்புக்களுக்கு பாடநெறிகளை பயன்வாய்ந்தவாறு பயன்படுத்திக் கொள்ளாமை காரணமாக தொழில் பயிற்சி வழங்குவதன் மூலம் திணைக்களம் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போயுள்ளது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்ட ஒரு வருட பாடநெறிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 496 ஆகும் என்பதுடன், இதில் பாடநெறிகளை நிறைவு செய்தவர்களின் எண்ணிக்கை 261 ஆகும். இவர்களில் 66 பேர் மாத்திரம் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். வெற்றிகரமாக

பாடநெறிகளை நிறைவு செய்து தொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.1.1 நோக்கு மற்றும் செயற்பணி

திணைக்களத்தின் செயற்பணியான "இலக்குச் சமுதாயத்தினரின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் பலப்படுத்துவதன் மூலம் சமூக இடையீட்டுக்கான நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்வாண்மைசார் தலையீட்டின் மூலம் புத்தாக்க அணுகுமுறைகளின் ஊடாக வேகமான, வினைத்திறன்மிக்க, விளைதிறன்மிக்க ஆராய்ச்சிகளை நடாத்தல், கொள்கைகளை வகுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்ளல்" இற்காக திணைக்களம் மேற்கொண்டுள்ள பணிகளில் புத்தாக்க அணுகுமுறைகளின் ஊடாக வேகமான, வினைத்திறன்மிக்க, விளைதிறன்மிக்க ஆராய்ச்சிகளை நடாத்தல் மற்றும் கொள்கைகளை வகுக்க வேண்டுமாயினும் வலது குறைந்தவர்கள் உட்பட ஏனைய ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலைமைக்கு ஆளாகியுள்ள சிறப்புரிமைகள் அற்ற சமுதாயத்தினரின் சமமான உரிமைகள், வாய்ப்புக்கள், சுதந்திரம் மற்றும் சமூக பாதுகாப்பை உறுதிசெய்தல், வலது குறைந்தவர்களுக்கான வருமான உருவாக வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவர்களின் நிலைமையை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக போதியளவிலான பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 உத்தேச முடிவு மட்டங்களை அடைந்துகொள்ளமை

மூலதன சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் புனரமைப்பு மற்றும் பராமரிப்பின் கீழ் ரிதியகம கலன தடுத்துவைத்தல் இல்லத்தின் கட்டிடம் புனரமைப்பு, பராமரிப்புக்காக கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்பு புனரமைப்புச் செலவினத் தலைப்பின் கீழ் தேறிய ஏற்பாடு ரூபா 9,749,000 உம், கட்டிடம் மற்றும் நிர்மாணிப்பு மூலதன செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 34,561,000 உம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள தாமதம் காரணமாக இவற்றில் முறையே ரூபா 9,703,038 அதாவது 92 சதவீதம் மற்றும் ரூபா 26,421,487 அதாவது 76 சதவீதம் பயன்படுத்தப்படாது எஞ்சியுள்ளதுடன், ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பணிகளை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.3 உத்தேச பெறுபேறுகளை அடைந்துகொள்ளாமை

(அ) தொழில் பயிற்சி நிலையங்களில் உணவும், குடிபானமும் வழங்குபவர்களை பதிவு செய்தல் அல்லது பெறுகை முறையியலைப் பின்பற்றுவது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டில் சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் உணவுக்காக ரூபா 8,693,895 மற்றும் உணவு தயார் செய்யும் ஊழியரான சமையற்காரருக்கு சம்பளமாக ரூபா 2,058,774 செலவிடப்பட்டுள்ள போதிலும், சமையற்காரமான ஊழியரின் வசதி கருதி உணவு மெனுவில் குறிப்பிடப்பட்டுள்ள உணவுகளுக்குப் பதிலாக வேறு உணவுகளை வழங்கியதன் மூலம் வலதுகுறைந்த மாணவர்களுக்கு போதியளவு போசாக்குமிக்க உணவுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஆ) மீளாய் ஆண்டில் சுத்தம் செய்யும் சேவைகளை வழங்குவதற்காக ஊழியர்கள் 07 பேருக்கு தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 3,005,740 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ள போதிலும், உணவும், குடிபானமும் வழங்கும் சமையலறை உட்பட வடிகாலமைப்பு மற்றும் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்வது மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதுடன், உடன்படிக்கைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை.

### 4.2 சொத்து முகாமைத்துவம்

சமூக சேவைகள் திணைக்களத்தினால் பேணிவரப்படுகின்ற சிறுவர் வழிகாட்டல் மற்றும் தொழில் பயிற்சி நிலைகங்கள் 02 மற்றும் தொழில் பயிற்சி நிலையங்கள் 04 அமைந்துள்ள ஹெக்டயர் 5,969 அளவான காணிகள் சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நிதிசார் முறைகேடு வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

விலைமதிப்புப் பெறுமதி ரூபா 38,000,000 ஆன ஹெக்டயர் 2.7023 ஆன தெலம்புயாய தொழில் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள காணியில் தென்னைப் பயிர்செய்கையைக் கொண்ட காணிப்பகுதியில் வாழை மற்றும் பெசன்புருட் இடைநிலைப் பயிர்செய்கைக் கருத்திட்டம் பேணிவரப்பட்டுள்ளது. தனியார் தரப்பினர் ஒருவரினால் இந்தப் பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இக்காணி இடைநிலைப் பயிர்செய்கைக்காக 2024 யூலை மாதம் 15 ஆம் திகதி முதல் 12 வருட காலப்பகுதிக்கு தழுவல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அது சம்பந்தமான உடன்படிக்கை அல்லது உரிமப்பத்திரம் எதுவும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிறுவனத்திற்கு உரித்தான வயல் காணியிலும் வெறு தரப்பினரினால் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காணியில் காணப்பட்ட விளைச்சல் இல்லாத மரங்களை வெட்டிவிடுவதற்கு நிலையப் பொறுப்பு அலுவலர் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளார் என்பதுடன், நெல்லி,

லுனுமிதெல்ல போன்ற ஒரு சில மரங்கள் வெட்டப்பட்டுள்ளதுடன், அதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக் கொண்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. திணைக்கத்தின் முகாமைத்துவம் முறையான கண்காணிப்பை மேற்கொண்டிருக்கவில்லை.

### 4.4 நட்டம் மற்றும் இழப்பு

(அ) பதிவேடுகளிலிருந்து பதிவழிப்புச் செய்யும் கூற்றில் நி.பி. 109 இன் கீழ் புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்தல் மற்றும் அறவிட்டுக் கொள்ளல் என்ற வகையில் மோட்டார் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாதன் மூலம் ஏற்பட்ட நட்டமான ரூபா 355,300 பதிவழிப்புச் செய்யப்படாது முன்கொண்டு சென்ற மீதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மோட்டார் வாகனம் கிராமிய அபிவிருத்தி சமுதாய வலுவூட்டல் அமைச்சுக்கு உரித்தானதாகும் என்பதுடன், தற்காலிக அடிப்படையில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த நட்டப் பெறுமதி திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (11) இல் குறிப்பிடப்பட முடியாததாக இருப்பினும் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) சீதுவ தொழில் பயிற்சி நிறுவனத்தில் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அங்கீகாரம் இன்றி ரூபா 40,820 பெறுமதிமிக்க உணவும், குடிபானமும் வழங்கப்பட்டுள்ளதுடன், இத்தொகையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொழும்பு 02, வொக்சோல் வீதி, இலக்கம் 136 எனும் இடத்தில் சமூக சேவைகள் திணைக்களத்தினால் 1992-2012 ஆண்டு வரை போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையமாக நவோத்ய நிறுவனம் பேணிவரப்பட்டுள்ளதுடன், அதற்கான வீதவரியும் செலுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு இக்கட்டிடத்திலிருந்து வெளியேறியுள்ள போதிலும், கட்டிடத்திலிருந்து வெளியேறியுள்ளதை முறையாக அறிவிப்புச் செய்யாமை காரணமாக 20212 ஆண்டு முதல் 2015.12.31 ஆம் திகதி வரை நிலுவை வீதவரியாக ரூபா 2,789,684 ஆன தொகையை கொழும்பு மாநகரசபை நகரத் திறைசேரிக்கு செலுத்த வேண்டி திணைக்களத்திற்கு ஏற்பட்டது. மேலும் இக்கட்டிடம் மற்றும் காணியிலிருந்து வெளியேறும் போது அது தொடர்பாக நடவடிக்ககை மேற்கொள்ள வேண்டிய நிறுவனமொன்றுக்கு கையளிக்காமை காரணமாக 12 வருடங்களுக்கும் மேலாக மேற்படி கட்டிடம் பயனற்றதாகக் காணப்பட்டது.

## 5. மனிதவள முகாமைத்துவம்

### 5.1 இணைப்புச் செய்யப்பட்ட பதவியணி, உண்மைப் பதவியணி

(அ) ஆண்டினுள் அங்கீகரிக்கப்பட்ட, உண்மை, வெற்றிடம் மற்றும் மிகையான பதவியணிக்கு அமைய சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 04 உம், மூன்றாம் நிலை மட்டத்திலான 300 பதவிகளும், இரண்டாம் நிலை மட்டத்திலான 65 பதவிகளும், ஆரம்ப மட்டத்திலான 30 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 160 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், வெற்றிடங்களை நிரப்புவது அவசியமற்றதாயின் பதவியணியைத் திருத்தம் செய்துகொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு சமூக சேவைகள் அலுவலர்கள் 25 பேர், தொழில் போதனாசிரியர்கள் 25 பேர், நிலையப்பொறுப்பு அலுவலர் ஒருவர், சைகை மொழிபெயர்ப்பாளர் அலுவலர்கள் 05 பேர் மற்றும் முகாமைத்துவ சேவைகள் அலுவலர்கள் 07 பேர் ஒரே சேவை நிலையத்தில் 06 முதல் 30 வருட காலமாக இடமாற்றம் பெறாது சேவையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், இடமாற்றம் செய்யும் கொள்கையொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**கையொப்பம் / கே.கே.எஸ். ஜயகொடி**

**பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.**

# 04 ஆம் அத்தியாயம்

# செயலாற்றுகைச் சுட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | உத்தேச பூர்த்தி செய்தலின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்தது | | |
|---|---|---|---|
| | 90% - 100% | 75% - 89% | 50% - 74% |
| 01. தொழில் பயிற்சி வழங்கப்பட்ட வலது குறைந்த இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கை - 496 | √ | | |
| 02. வலது குறைந்த பிள்ளைகளுக்கு, சிறுவர் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை 196 | √ | | |
| 03. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம்<br>நேரடியாக பயன்பெற்ற வலது குறைந்த ஆட்களின் எண்ணிக்கை - 30 | √ | | |
| 04. சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டம்<br>05. விசேட கருத்திட்ட உதவி பெற்ற வலது குறைந்த ஆட்களின் எண்ணிக்கை **-49** | √ | | |
| 06. கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியத்தின் கீழ் பயன்பெற்ற கற்புலனற்ற ஆட்களின் எண்ணிக்கை -368 | √ | | |
| 07. அலுவலர்களின் திறன் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை - 46 | √ | | |

# 05 ஆம் அத்தியாயம்

# நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) அடைந்துகொள்வதன் செயலாற்றுகை

## 5.1 இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG)

| இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் | இலக்கு | வெற்றிச் சுட்டிகள் | விகிதம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0 – 49% | 50 – 74% | 75 – 100% |
| **4.5 2030 ஆம் ஆண்டளவில் கல்வியில் பால் நிலைசார் அடிப்படையிலான பாரபட்சம் காட்டலை ஒழித்தல், கல்வியில் சகல மட்டங்களிலும் பிரவேசிப்பதை உறுதி செய்தல், வலது குறைந்த ஆட்களுக்கு, உள்நாட்டவர்களுக்கு மற்றும் அச்சுறுத்தலான நிலையிலுள்ள சிறுவர்களுக்கு தொழில் பயிற்சி பெற்றுக் கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.** | வலது குறைந்த சிறுவர்களுக்கு சிறுவர் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பாலர் பாடசாலை மற்றும் சாதாரண பாடசாலைக் கல்வியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் 200 | சிறுவர் வழிகாட்டல்கள் வழங்கப்பட்ட வலது குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை 196<br><br>சாதாரண பாலர் பாடசாலை மற்றும் சாதாரண பாடசாலைகளில் இணைக்கப்பட்ட எண்ணிக்கை 13 | | | √ |
| | வயது 16-35 இற்கு இடைப்பட்ட வலது குறைந்த ஆட்கள் 290 பேருக்கு தொழில் பயிற்சி வழங்குதல் மற்றும் திறன் அபிவிருத்தி | தொழில் பயிற்சியை பூர்த்தி செய்து பரீட்சையில் சித்தியடைந்துள் ளவர்களின் எண்ணிக்கை 261 | | | √ |
| | தொழில் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களின் அபிவிருத்திக்கு தனிநபர் அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் - 380 | தயார் செய்யப்பட்ட தனி நபர் அபிவிருத்தித் திட்டங்களின் எண்ணிக்கை 352 | | | √ |
| | கற்புலனற்றோர் நம்பிக்கை நிதியத்தின் கீழ் மாணவர்களின் கல்விக்கு மாணவர் உதவி வழங்குதல் - 400 | மாணவர் உதவி வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை- 303 | | | √ |
| **8.5 2030 ஆம் ஆண்டளவில் வலது குறைந்த ஆட்கள் மற்றும் இளைஞர்கள்** | தொழில்வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ள ஆட்களுக்கு சுயதொழில் வாய்ப்பு அல்லது | தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுத்தல் - 380 | | | √ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உட்பட சகல பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் விளைதிறன்மிக்க மற்றும் வினைத்திறன்மிக்க தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்** | நிறுவனமயப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்குத் தேவையான பயிற்சி, வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு | சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுத்தப்பட்ட எண்ணிக்கை- 26 | | | |
| **10.2**<br>**2030 ஆம் ஆண்டளவில் வயது, பால், வலது குறைந்த நிலைமை, இனம், சமயம் அல்லது பொருளாதாரம் அல்லது வேறு நிலைமைகள் பற்றிப் பொருட்படுத்தாது சகலரினதும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் இடையீட்டை பலப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்** | பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்துள்ள ஆட்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல் | அரவணைப்பு வழங்கப்பட்ட வலது குறைந்த ஆட்களின் எண்ணிக்கை - 126 | | | √ |
| | போதைக்கு அடிமையானவர்கள் 100 பேருக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல் | புனர்வாழ்வளிக்கப்பட்ட மற்றும் சமூகமயப்படுத்தப் பட்டவர்களின் எண்ணிக்கை 98 | | | √ |
| | நாடோடிகள் கட்டளைச் சட்டத்திற்கு அமைய குற்றவாளியாகும் ஆட்களுக்கு அரவணைப்பு மற்றும் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் | அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை – 508<br>சமூகமயப்படுத்தல் -13 | | | √ |

### 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்

சமூக சேவைகள் திணைக்களம் தமது ஏற்பாடுகளுக்கு உட்பட்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 03 இன் கீழ் வருடாந்தம் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை தயார் செய்கின்றது. அவ்வாறு 2025 ஆம் ஆண்டிலும் திட்டமிடப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

# அத்தியாயம் 06
# மனித வளத் தோற்றப்பாடு

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் வெற்றிடயங்களின் எண்ணிக்கை – 2025.12.31 ஆம் திகதிக்கு**

- **நிரந்தர பதவியணி**

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போது காணப்படுகின்ற பதவியணி | வெற்றிடம் / (மிகை) ** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 11 | 06 | 05 |
| மூன்றாம் நிலை | 518 | 220 | 101* |
| இரண்டாம் நிலை | 716 | 638 | 71** |
| ஆரம்ப நிலை | 289 | 250 | 39 |

* மூன்றாம் நிலையில் உள்ளடங்கும் சமூக சேவைகள் அலுவலா் பதவிகள் 494 அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவி வெற்றிடங்களில் பூா்த்தி செய்ய முடிவது, MN 4 சம்பள வகுதியைச் சோ்ந்த பதவிகளை வகிப்பவருக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் ஏற்புடையவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலா் பதவிகள் இல்லாதொழிக்கப்பட்ட பின்னராகும்.

** மேலும், அரச நிருவாக அமைச்சினால் அடிக்கடி அபிவிருத்தி அலுவலா்கள் இணைப்புச் செய்யப்படுவதன் காரணமாக இரண்டாம் நிலையில் உள்ளடங்கும் MN 4 அபிவிருத்தி அலுவலா் பதவிகள் தற்போது மிகையாக உள்ளன. எனவே மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தொடா்பில் உண்மையாகக் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை இங்கு தரப்பட்டுள்ளது.

- ஒப்பந்த அடிப்படையிலான பதவியணி

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போது காணப்படுகின்ற பதவியணி | வெற்றிடம் / (மிகை) ** |
|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் | 01 | 0 | 1 |
| மருந்தாளர் | 01 | 0 | 01 |
| புனர்வாழ்வளிப்பு உதவியாளர் | 09 | 0 | 09 |
| பாலர் பாடசாலை ஆசிரியர் | 84 | 0 | 84 |
| கவனிப்பாளர் | 53 | 0 | 53 |
| அலுவலக சிற்றூழியர் | 12 | 0 | 12 |

**சமூக சேவைகள் திணைக்களத்தின் பதவியணி 2025-12-31**

| தொடர் இல. | பதவி | சேவை | தரம் | சம்பள வகுதி பொ.நி.சு. | அங்கீகரிக்க ப்பட்ட | தற்போதுள் ள | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் | இ.நி.சே. | I | SL 1 | 1 | 1 | 0 |
| 2 | மேலதிகப் பணிப்பாளர் | இ.நி.சே. | I | SL 1 | 2 | 1 | 1 |
| 3 | பிரதம கணக்காளர் | இ.க.சே. | I | SL 1 | 1 | 1 | 0 |
| 4 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | இ.க.சே. | I | SL 1 | 1 | 0 | 1 |
| 5 | கணக்காளர் | இ.க.சே. | II/ III | SL 1 | 2 | 1 | 1 |
| 6 | பிரதிப் பணிப்பாளர் /உதவிப் பணிப்பாளர் | இ.க.சே. | II/ III | SL 1 | 3 | 2 | 1 |
| 7 | பிரதி /உதவிப் பணிப்பாளர் | இல.தி.சே. | II/ III | SL 1 | 1 | 0 | 1 |
| 8 | மருத்துவ அலுவலர் | ஒப்பந்த | | | 1 | 0 | 1 |
| 9 | நிருவாக அலுவலர் | முகா.சே.அ.(சிற) | சிறப்புத் தரம் | MN 7 | 1 | 1 | 0 |
| 10 | நிலையப்பொறுப்பு அலுவலர் | திணைக்களம்சார் | விசேட | MN 7 | 22 | 3 | 19 |
| 11 | வேலை முகாமையாளர் | திணைக்களம்சார் | விசேட | MN 7 | 1 | 0 | 1 |
| 12 | சமூக சேவைகள் அலுவலர் * | திணைக்களம்சார் | I /II | MN 5 | 494 | 216 | 81 |
| 13 | இயன் மருத்துவர் | உதவி மருத்துவ சேவை | I /II/ III | MT 6 | 1 | 0 | 1 |
| 14 | தொழில்சார் சிகிச்சையளிப்பவர் | உதவி மருத்துவ சேவை | I /II/ III | MT 6 | 1 | 0 | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | பேச்சுசார் சிகிச்சையளிப்பவர் | திணைக்களம்சார் | I /II/ III | MT 6 | 1 | 0 | 1 |
| 16 | மருந்தாளர் | ஒப்பந்த | | | 1 | 0 | 1 |
| 17 | சமூக அபிவிருத்தி உதவியாளர் ** | இணை சேவை | I /II/ III | MN 4 | 1 | 1 | 0 |
| 18 | அபிவிருத்தி அலுவலர் (சமூக சேவை) *** | அபி. அலு. சேவை | I /II/ III | MN 4 | 219 | 261 | -42 |
| 19 | அபிவிருத்தி அலுவலர் (ரிதியகம) | அபி. அலு. சேவை | I /II/ III | MN 4 | 7 | 6 | 1 |
| 20 | அபிவிருத்தி அலுவலர் (முதியோர் / சமூக சேவை ) | அபி. அலு. சேவை | I /II/ III | MN 4 | 285 | 263 | 22 |
| 21 | பயிலுனர் மொழிபெயர்ப்பாளர் | இணை சேவை ஒப்பந்த | | MN 4 | 1 | 0 | 1 |
| 22 | தொழில்சார் போதனாசிரியர் | திணைக்களம்சார் | I /II/ III | MT 1 | 67 | 39 | 28 |
| 23 | தொழில்நுட்ப அலுவலர் | இலங்கை தொழில்நுட்ப சேவை | I /II/ III | MT 1 | 1 | 0 | 1 |
| 24 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இ.த.தொ.தொ.உத .சேவை | I /II/ III | MT 1 | 1 | 0 | 1 |
| 25 | முகாமைத்துவ சேவைகள் அலுவலர் | முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை | I /II/ III | MN 2 | 67 | 47 | 20 |
| 26 | சமிஞ்சை மொழிபெயர்ப்பாளர் | திணைக்களம்சார் | I /II/ III | MN 2 | 26 | 10 | 16 |
| 27 | பாலர் பாடசாலை ஆசிரியர் | திணைக்களம்சார் | I /II/ III | MN 1 | 10 | 2 | 8 |
| 28 | வீடு பொறுப்பாளர் | திணைக்களம்சார் | I /II/ III | MN 1 | 26 | 15 | 11 |
| 29 | உபசரணை ஊழியர்*** | திணைக்களம்சார் | I /II/ III | MN 1 | 2 | 2 | 0 |
| 30 | சாரதி | சாரதி சேவை | I /II/ III | PL 3 | 17 | 13 | 4 |
| 31 | சமையற்காரர் ****  | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 17 | 12 | 5 |
| 32 | மின்னுற்பவியலாளர் | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 1 | 0 | 1 |
| 33 | தச்சர்*** | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 1 | 1 | 0 |
| 34 | கவனிப்பாளர் (ரிதியகம) | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 38 | 34 | 4 |
| 35 | பாதுகாவளர்***** | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 9 | 9 | 0 |
| 36 | சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 5 | 5 | 0 |
| 37 | சமையற்காரின் உதவியாளர் | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 25 | 20 | 5 |
| 38 | கவனிப்பாளர் | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 59 | 52 | 7 |
| 39 | அலுவலக சிற்றூழியர் | அலுவலக சிற்றூழியர் சேவை | I /II/ III/special | PL 1 | 51 | 42 | 9 |
| 40 | அலுவலக சிற்றூழியர் *** | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 2 | 23 | 19 | 0 |
| 41 | தொழிலாளி | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 10 | 9 | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | துப்பரவேட்பாட்டு தொழிலாளி | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 20 | 20 | 0 |
| 43 | காவலாளி | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 13 | 13 | 0 |
| 44 | நீர்ப் பம்பி இயக்குனர்*** | திணைக்களம்சார் | I /II/ III/special | PL 1 | 1 | 1 | 0 |
| 45 | புனர்வாழ்வளிப்பு உதவியாளர் | ஒப்பந்த | | PL 1 | 9 | 0 | 9 |
| 46 | பாலர் பாடசாலை ஆசிரியர் | ஒப்பந்த | | MN1 | 84 | 0 | 84 |
| 47 | கவனிப்பாளர் | ஒப்பந்த | | PL 1 | 53 | 0 | 53 |
| 48 | அலுவலக சிற்றூழியர் | ஒப்பந்த | | PL 2 | 12 | 0 | 12 |
| | மொத்தம் | | | | 1695 | 1122 | 372 |

* சமூக அபிவிருத்தி உதவியாளர் பதவிகளை வகிப்பவர்களை சமூக சேவை அலுவலர்களாக ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் வரை மற்றும் அபிவிருத்தி அலுவலர் பதவிகள் 196 உம் இல்லாதொழிக்கப்படும் வரை சமூக சேவைகள் அலுவலர் பதவி வெற்றிடங்களை நிரப்பக் கூடாது.

** வெற்றிடங்களை நிரப்பாதிருப்பதற்கு உட்பட்டு

*** வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையில் ஏற்புடையதாகும் வகையில் பின்னர் இல்லாதொழிக்கப்படுவதற்கு உட்பட்டு

**** 02 பதவிகளை வகிப்பர்களுக்கு தனிப்பட்ட வகையில் பின்னர் இல்லாதொழிக்கப்படுவதற்கு உட்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

***** பதவிகளை வகிப்பர்களுக்கு தனிப்பட்ட வகையில் ஏற்புடையவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்பும் போது கவனிப்பாளர் பதவிகளின் மொத்த பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 40 வரை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**விசேட குறிப்பு :** தொழில் போதனாசிரியர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 67 இல் ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 09 பதவிகளும் உள்ளடங்கும் என்பதுடன், உண்மையான பதவியணியிலும் தற்போது ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற அலுவலரும் உள்ளக்கப்பட்டுள்ளார்.

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை / மிகை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள முறை

சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் ஒட்டுமொத்தமாகக் காணப்படுவது பதவியணிப் பற்றாக்குறையாகும். அவ்வாறாயினும், அரச நிருவாக அமைச்சினால் புதிய நியமனம் பெற்றுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டமை காரணமாக அபிவிருத்தி அலுவலர் பதவிகளில் மிகை காணப்படுகின்ற போதிலும், பதவியை வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர் பதவிகள் இல்லாதொழியும் வரை சமூக சேவைகள் அலுவலர் பதவிக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள முடியாமையும்,

உண்மையாக சமூக சேவைகள் அலுவலர் பதவிகளில் பெரும் எண்ணிக்கையான வெற்றிடங்கள் காணப்படுவதனாலும் மிகையான அபிவிருத்தி அலுவலர்களை சமூக சேவைகள் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்ற சேவை நிலையங்களுக்கு இணைப்புச் செய்து குறித்த பணியை நிறைவேற்றிக் கொண்டமை காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் விளைத்திறன்மிக்க மனிதவளம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

காணப்படுகின்ற மனிதவளம்சார் தேவைப்பாட்டுக்கு அமைய நியாயமாக விஸ்தரிக்கச் செய்து திணைக்களத்தின் பணிகளை விளைதிறன்மிக்கவாறும், வினைத்திறன்மிக்கவாறும் நிறைவேற்றுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை மட்டத்தை அடைந்துகொள்ள வழிப்படுத்தப்பட்டது. ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலைமைக்கு ஆளாகியுள்ள சமுதாயத்தினரின் உரிமைகளை உறுதி செய்யும் திணைக்களத்தின் செயற்பணியை மென்மேலும் வினைத்திறனும், விளைதிறனும் மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு மனிதவளம் அங்கீகரிக்கப்பட்ட அளவில் காணப்படுவது உகந்ததாகும்.

## 6.3 மனித வள அபிவிருத்தி

| தொடர் இலக்கம் | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் கால எல்லை | ஒட்டுமொத்த முதலீடு (ரூ.) | நிகழ்ச்சித் திட்டத்தின் தன்மை (உள்நாடு /வெளிநாடு) | முடிவு/பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| 01 | சைகை மொழிபெயர்ப்பு அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தும் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் - சைகை மொழியின் புதிய போக்குகள் | 8 | 01 நாள் | 8,080.00 | உள்நாடு | சைகை மொழியின் புதிய போக்குகள் |
| 02 | நிதிப் பிரமாணம் - கொடுப்பனவு நடைமுறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தலைமை அலுவலக அலுவலர்களுக்கு | 52 | 03 மணித்தியாலம் | 5,597.50 | உள்நாடு | நிதிப் பிரமாணம் - கொடுப்பனவு நடைமுறை பற்றிய அறிவு |
| 03 | ஆராய்ச்சி முறைகளை அறிமுகம் செய்வது பற்றிய முதலாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 23 | 02 நாள் | 74,864.00 | உள்நாடு | ஆராய்ச்சி முறை பற்றிய அறிவு |
| 04 | சுயவிபரக் கோப்புக்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 7 | 01 நாள் | 45,500.00 | உள்நாடு | சுயவிபரக் கோப்புக்கள் பற்றிய அறிவு |
| 05 | கருத்திட்டப் பிரேரணைகளை தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (பௌதீக மற்றும் ஒன்லையின்) | 123 | 01 நாள் | 1,23530.00 | உள்நாடு | கருத்திட்டப் பிரேரணைகளை தயார் செய்வது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | பற்றிய அறிவு |
| 06 | சைகை மொழிபெயர்ப்பு அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தும் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டம் - | 8 | 01 நாள் | 9,675.00 | உள்நாடு | சைகை மொழியின் புதிய போக்குகள் |
| 07 | வலதுகுறைந்த ஆட்களை தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பாக அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 27 | 01 நாள் | 7930.00 | உள்நாடு | வலதுகுறைந்த ஆட்களை தொழிலில் ஈடுபடுத்துவது பற்றிய அறிவு |
| 08 | சைகை மொழிபெயர்ப்பு அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தும் மூன்றாவது நிகழ்ச்சித்திட்டம் - பொலிஸ் முறைப்பாடுகளைப் பதிவு செய்தல் மற்றும் அது பற்றிய சட்டங்களை அறிமுகம் செய்தல் | 7 | 01 நாள் | 11,510.00 | உள்நாடு | சைகை மொழியின் புதிய போக்குகள் |
| 09 | புதிய சைகை மொழிபெயர்ப்பு அலுவலர்களுக்கு சைகை மொழிப் பயிற்சி மொடியுலை அறிமுகம் செய்யும் இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - | 3 | 02 நாள் | 4,900.00 | உள்நாடு | சைகை மொழிப் பயிற்சி மொடியுல் பற்றிய அறிவு |
| 10 | நிதிப் பிரமாணம் - கொடுப்பனவு நடைமுறை, பொருட் கணிப்பீடு மற்றும் ஏற்பாடுகளை ஒதுக்கம் செய்வது பற்றி விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தொழில் பயிற்சி நிறுவன அலுவலர்களுக்கு | 49 | 01 நாள் | 44,962.50 | உள்நாடு | நிதிப் பிரமாணம் - கொடுப்பனவு நடைமுறை, பொருட் கணிப்பீடு மற்றும் ஏற்பாடுகளை ஒதுக்கம் செய்வது பற்றிய அறிவு |
| 11 | திணைக்களத்தின் இணையத்தள நிருவாகம் (Administration) பற்றிய பயிற்சி | 1 | 02 மணித்தியாலம் | 7,000.00 | உள்நாடு | இணையத்தள நிருவாகம் (Administration) பற்றிய அறிவு |
| 12 | அரச ஊழியர்களின் சம்பளப் பரிமாற்றம் மற்றும் கணிப்பீடு செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 10 | 01 நாள் | 50,000.00 | உள்நாடு | அரச ஊழியர்களின் சம்பளப் பரிமாற்றம் மற்றும் கணிப்பீடு செய்வது பற்றிய அறிவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13 | நோயாளர்களுக்கு உபசரணை சேவை பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 70 | 01 நாள் | 64,250.00 | உள்நாடு | நோயாளர்களுக்கு உபசரணை சேவை பற்றிய அறிவு |
| 14 | ஆராய்ச்சிக் குழுக்களுக்கு ஆராய்ச்சி முறையியல் மற்றும் வினாக்கொத்துக்களை தயார் செய்வது பற்றிய செயலமர்வு | 31 | 01 நாள் | 31,000.00 | உள்நாடு | ஆராய்ச்சி முறையியல் மற்றும் வினாக்கொத்துக்களை தயார் செய்வது பற்றிய அறிவு |
| 15 | CBR பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - தலைமை அலுவலக அலுவலர்களுக்கு | 65 | 01 நாள் | 16,975.00 | உள்நாடு | CBR பற்றிய பயிற்சி |
| 16 | அரச துறை சம்பளம் தயார் செய்வது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | 03 நாள் | 18,000.00 | உள்நாடு | அரச துறை சம்பளம் தயார் செய்வது பற்றிய அறிவு |
| 17 | வீடமைப்பு நிருவாக அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலக அலுவலர்களுக்கு தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அறிமுகம் | 15 | 01 நாள் | 109,950.00 | உள்நாடு | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அறிவு |
| 18 | சைகை மொழிபெயர்ப்பு அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தும் மூன்றாவது நிகழ்ச்சித்திட்டம் - | 4 | ½ நாள் | 3,600.00 | உள்நாடு | சைகை மொழியின் புதிய போக்குகள் |
| 19 | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 1 | 02 நாள் | 12,000.00 | உள்நாடு | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அறிவு |
| 20 | Copetency Development for Receptionist/Telephone Operators | 3 | 01 நாள் | 19,500.00 | உள்நாடு | Knoledge upgrading of Receptionist/ Telephone Operators |
| 21 | சமையற்காரர் உதிவயாளர், கவனிப்பு அலுவலர்களுக்கான வினைத்திறன் காண்த முன் பயிற்சி | 20 | 01 நாள் | 12,643.00 | உள்நாடு | சமையற்காரர் உதிவயாளர், கவனிப்பு அலுவலர்களுக்கான வினைத்திறன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | காண்த முன் பயிற்சி |
| 22 | மோட்டார் வாகன இயந்திர அறிவு மற்றும் வீதிச் சட்டங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 3 | 02 நாள் | 39,000.00 | உள்நாடு | மோட்டார் வாகன இயந்திர அறிவு மற்றும் வீதிச் சட்டங்கள் பற்றிய அறிவு |
| 23 | அலுவலக முறை பற்றிய இரண்டு நாள் பயிற்சி | 6 | 02 நாள் | 72,000.00 | உள்நாடு | அலுவலக முறை பற்றிய அறிவு |
| 24 | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய சட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 75 | ½ நாள் | 18,250.00 | உள்நாடு | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கள் பற்றிய சட்டம் பற்றிய அறிவு |
| 25 | பெறுகை செயன்முறை மற்றும் நடைமுறையில் பயன்படுத்துவது பற்றிய மூன்று நாள் பயிற்சிச் செயலமர்வு | 3 | 03 நாள் | 54,000.00 | உள்நாடு | பெறுகை செயன்முறை மற்றும் நடைமுறையில் பயன்படுத்துவது பற்றிய அறிவு |
| 26 | புத்தகம் கட்டுதல் பற்றிய பயிற்சிப் பாடநெறி | 2 | 02 நாள் | 15,000.00 | உள்நாடு | புத்தகம் கட்டுதல் பற்றிய அறிவு |
| 27 | ஆலோசனை உட்பட மனஅழுத்த முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 71 | 01 நாள் | 127,090.00 | உள்நாடு | மனஅழுத்த முகாமைத்துவம் |
| 28 | அரச அலுவலர்களுக்கு களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2 | 01 நாள் | 13,000.00 | உள்நாடு | களஞ்சிய முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| 29 | தொழில் பயிற்சி நிறுவன அலுவலர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவது பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 56 | 01 நாள் | 84,213.00 | உள்நாடு | தொழில் பயிற்சி நிறுவன அலுவலர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவது பற்றிய அறிவு |
| 30 | அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்களின் | 4 | 02 நாள் | 48,000.00 | உள்நாடு | அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திறன் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | | | | வ சேவை அலுவலர்களின் திறன் அபிவிருத்தி |
| 31 | Certificate Program in English for Office Management பயிற்சிப் பாடநெறி | 1 | 10 நாள் | 25,000.00 | உள்நாடு | ஆங்கில மொழிப் பயிற்சி |
| 32 | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய இரண்டு நாள் பயிற்சி | 1 | 01 நாள் | 12,000.00 | உள்நாடு | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் பற்றிய அறிவு |
| 33 | லீவுப் பொறுப்பு அலுவரின் செயற்பணி | 1 | 01 நாள் | 6,500.00 | உள்நாடு | லீவுப் பொறுப்பு அலுவரின் செயற்பணி பற்றிய அறிவு |
| 34 | இணைந்த சமூகப் பாதுகாப்பு தரவு முறைமையில் தரவேற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் | 56 | ½ நாள் | 112,300.00 | உள்நாடு | இணைந்த சமூகப் பாதுகாப்பு தரவு முறைமையில் தரவேற்றம் செய்வது பற்றிய பயிற்சி |
| 35 | ஆரம்ப விசாரணை பற்றிய பாடநெறி | 1 | 01 நாள் | 6,500.00 | உள்நாடு | ஆரம்ப விசாரணை பற்றிய அறிவு |
| 36 | கோப்பு முகாமைத்துவம் பற்றிய பாடநெறி | 1 | 01 நாள் | 6,500.00 | உள்நாடு | கோப்பு முகாமைத்துவம் பற்றிய அறிவு |
| 37 | ரிதியகம தடுத்துவைத்தல் இல்லத்தின் பதவியணியினருக்கு ஆலோசனை திறமைகள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 120 | 02 நாள் | 29,713.00 | உள்நாடு | ஆலோசனை திறமைகள் மற்றும் திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் |
| 38 | பெறுகை செயன்முறை பற்றி நிறுவன அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலக அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 85 | 01 நாள் | 81,225.00 | உள்நாடு | பெறுகை செயன்முறை பற்றிய அறிவு |
| 39 | வைத்தியசாலை சமூக சேவை அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலக | 70 | ½ நாள் | 29,900.00 | உள்நாடு | கருத்திட்ட முகாமைத்துவம் பற்றிய அறிவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அலுவலர்களுக்கு மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | | | | |
| 40 | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - மாத்தறை | 120 | 01 நாள் | 109,350.00 | உள்நாடு | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் அறிவு |
| 41 | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - அநுராதபுரம் | 135 | 01 நாள் | 124,200.00 | உள்நாடு | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் அறிவு |
| 42 | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - கொழும்பு | 140 | 01 நாள் | 189,000.00 | உள்நாடு | புதிய தரவு முறையில் தரவேற்றம் செய்யும் அறிவு |
| 43 | கணக்கீட்டு செயற்பணி மற்றும் நடைமுறைப் பயன்பாடு | 1 | 02 நாள் | 12,000.00 | உள்நாடு | கணக்கீட்டு செயற்பணி மற்றும் நடைமுறைப் பயன்பாடு பற்றிய அறிவு |
| 44 | அலுவலக முறை பற்றிய பயிற்சி | 1 | 02 நாள் | 12,000.00 | உள்நாடு | அலுவலக முறை பற்றிய பயிற்சி |
| 45 | அலுவலக சிற்றூழியர் சேவையின் கடமைசார் பயிற்சி | 1 | 02 நாள் | 12,000.00 | உள்நாடு | அலுவலக சிற்றூழியர் சேவையின் கடமைசார் பயிற்சி உதவி |
| **வெளிநாட்டு பயிற்சிகள் / நிகழ்ச்சித்திட்டங்கள்** | | | | | | |
| | JICA Knowledge Co-Creation Program: Promotion Employment of Person with Disabilities (in Japan) | 01 | 2025. 09.01 – 2025. 10.11 | | | |

## நிறுவனத்தின் செயலாற்றுகைக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு

ஓரங்கப்பட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலையமைக்கு ஆளாகியுள்ள சமுதாயத்தினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பலப்படுத்துவதற்காக சமூக இடையீட்டுக்கான நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்வாண்மைசார் தலையீட்டின் மூலம் புத்தாக்க அணுகுமுறைகளின் ஊடாக துரிதமான, வினைத்திறன்மிக்க மற்றும் விளைதிறன்மிக்கவாறு கொள்கைகளை வகுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது சமூக சேவைகள் திணைக்களத்தின் முக்கிய பணியாகும்.

இப்பணிக்குப் பங்களிப்புச் சயெ்து சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பல்வேறு பிரிவுகள், நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் சுமார் 1122 பேர் சேவையாற்றி வருகின்றார்கள்.

இலக்குச் சமுதாயத்தினருக்கு வினைத்திறனும், விளைதிறனும்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்காக இந்த மனித வளத்தினை விடய ரீதியான அறிவு மற்றும் மனப்பாங்கு ரீதியாக அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமாகும் என்பதுடன், குறித்த நோக்கத்தை முன்னிட்டு சகல பதவிகளையும் உள்ளடக்கும் வகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்ட போதிலும், அரசின் செலவினக் கட்டுப்பாடுக்காக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு அத்தியாவசியமான பயிற்சித் தேவைகளை இனங்கண்டு குறைந்த பட்ச செலவினத்தில் மேற்கொள்ளக்கூடியதாகக் காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன.

தொழில்சார் திருப்தி, மனப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பல்வேறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், விடய ரீதியான அறிவை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்வேறு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்பட்டதுடன், வெளிநாட்டுப் பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளிலும் ஒரு சில அலுவலர்களுக்குப் பங்குபற்றும் வாய்ப்பும் கிடைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களிடம் அனுசரணை கிடைத்ததுடன், அறிவு, திறமை மற்றும் சாதகமான மனப்பாங்குசார் பண்புகளைக் கொண்ட மனிதவளமானது திணைக்களத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

# 07 ஆம் அத்தியாயம்

# இயைபு அறிக்கை

## 7.1 இயைபு அறிக்கை

| இலக்கம் | ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு | இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை) | ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம் | ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | **கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஏற்புடையது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஏற்புடையது | | |
| 1.3 | தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | ஏற்புடையதல்ல | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 1.6 | வேறு | | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.9 | நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.10 | பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 2.11 | உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (GA-N20) | ஏற்புடையது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 3.2 | நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல். | ஏற்புடையது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையது | | |
| 4 | **வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | ஏற்புடையது | | |
| 4.5 | வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையது | | |
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | ஏற்புடையது | | |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) DMA/1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல் | ஏற்புடையதல்ல | ஒரு கணக்காய்வு வினா வெளியிடப்பட்டுள்ளது. பிரதம கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக உள்ளதனால் கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதல்ல | ஒரு கணக்காய்வு வினா வெளியிடப்பட்டள்ளது. வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதம கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக உள்ளதனால் கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதல்ல | ஒரு கணக்காய்வு வினா வெளியிடப்பட்டள்ளது. வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதம கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக உள்ளதனால் கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| 5 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல். | ஏற்புடையது | | |
| 8 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல் | ஏற்புடையது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையது | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 8.5 | சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல் | ஏற்புடையது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | ஏற்புடையது | | |
| 9.2 | வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் | ஏற்புடையது | | |
| 9.3 | வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் | ஏற்புடையது | | |
| 9.6 | லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல் | ஏற்புடையது | | |
| 10 | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல் | ஏற்புடையது | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல். | ஏற்புடையது | | |
| 11 | **ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல் | ஏற்புடையது | | |
| 11.2 | நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் | ஏற்புடையது | | |
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு ஏற்புடையதாதல் | ஏற்புடையது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.2 | நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல் | ஏற்புடையது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல் | ஏற்புடையது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 14 | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 14.2 | நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஏற்புடையது | | |
| 14.3 | நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | ஏற்புடையது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல் | - | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல் | - | | |
| 15.3 | நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | - | | |
| 16 | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல் | ஏற்புடையது | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையது | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய MSD சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 17 | **பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல். | ஏற்புடையது | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல். | ஏற்புடையது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 18 | **பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து அமுல்படுத்தியிருத்தல். | ஏற்புடையது | | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 19 | **மனிதவள திட்டத்தை தயார் செய்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை | ஏற்புடையது | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல் | ஏற்புடையது | | |
| 19.3 | மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையது | | |
| 20 | **கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை. | ஏற்புடையது | | |